# திசை

THISAI



SRI … MUSLIM CONGRES… COLO…



அருள் எலெற்றிக்கல்ஸ்

மின்சார உபகரண விற்பன்னர்கள்

எமது திறப்பு விழாவில் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் 3-ம் திகதி பகல் 12.00 மணியளவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

இங்ஙனம்,
உங்கள் தோழமையுள்ள
தே. பி. அருளானந்தம்
(முகாமையாளர்
முருகன் எலெற்றிக்கல்ஸ்)

124, (6/8) ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



திசை 1 | 3-11-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 43


## மாலை தீவு சதிப்புரட்சி இளைஞர்கள் திருப்பி அனுப்பப்படுவர்

**சென்ற வருடம் நொவம்பரில் மாலைதீவுத் தாக்குதலின் போது கைது செய்யப்பட்டுத் தண்டனை அளிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் இலங்கைக்கே திருப்பி அனுப்பப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

மேற்படி தாக்குதலின் போது கைதுசெய்யப்பட்ட 68 இலங்கைத்தமிழ் இளைஞர்களில் 12 பேருக்கு சென்ற ஓகஸ்ற் மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக அது குறைக்கப்பட்டதும் ஏனைய 56 பேருக்கும் 17 வருடம் முதல் 38 வருடம் வரையிலான சிறைத்தண்டனை வழங்கப்பட்டதும் தெரிந்ததே.

தற்போது, மாலைதீவு அரசாங்கத்தின் உயர் மட்டத்தினர் சிலர், இவ்வாறு இந்த இளைஞர்களை தமது அரசாங்கத்தின் செலவில் ஏன் வைத்துப் பராமரிக்க வேண்டும் என்று கேள்வியெழுப்பியுள்ளதால், இவர்கள் திரும்பவும் இலங்கைக்கே அனுப்பப்படலாம் என மாலைதீவு அரசாங்க வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இது பற்றி இலங்கையின் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜயரத்னவிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்ட போது, "இவர்கள் களவாகச் சென்று சதிமுயற்சியில் ஈடுபட்டனர், இவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் நாம் என்ன செய்வது? எம்மைப் பொறுத்தவரை இவர்களைக் கடலில் மூழ்கடித்தாலும் கவலைப்படுவதற்கில்லை" என்று கூறினாராம். இவரது பதில் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

## மட்டுநகரிலிருந்து இ. படை விலகல்

அம்பாறை மாவட்டத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இந்தியப் படையினர் முற்றாக வெளியேறுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் டிசம்பர் மாத முடிவுக்குள் இலங்கையிலிருந்து இந்தியப்படையினர் முற்றாக வெளியேறுவதென இலங்கை–இந்திய அரசுகளுக்கு இடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து முதலில் அம்பாறை மாவட்டத்திலிருந்து இந்தியப் படையினர் கடந்த மாதம் வெளியேறினர். அதன் இரண்டாம் கட்டமாக அம்பாறை மாவட்டத்திற்கு அருகிலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வெளியேற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முதலில் படை வெளியேறும் இருமாவட்டங்களும் கிழக்கு மாகாண மாவட்டங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ராஜீவின் தலைமையிலான 8 ஆவது நாடாளுமன்ற ஆட்சிக்காலம் அயல் நாடுகளுக்கான படை உதவிக் காலமாக அமைந்தது. தற்போது மாலைதீவிலிருந்து படை முற்றாக வெளியேறியதையும், இலங்கையிலிருந்து வெளியேறிக்கொண்டிருப்பதையும் பார்க்கும்போது அவரது ஆட்சியின் இறுதிக்காலத்தை படைவிலகல் காலம் என அழைக்கலாம் போலும்.

## 300க்கும் அதிக மாணவர் தேடப்படுகின்றனர்

தென்னிலங்கையில் 300க்கும் அதிகமான பாடசாலை மாணவர்கள் தீவிரவாதிகளோடு சம்பந்தம் உடையவர்களாகவும் அதனால் அவர்கள் பாதுகாப்புப்படையின் தீவிர தேடுதலுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

தென்னிலங்கையில் பலமாத காலமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மீளவும் திறக்கப்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், திரும்பவும் பாடசாலைகளில் குழப்பநிலை ஏற்படாமல் இருப்பதற்காகப் பாதுகாப்புப் படையினர் மிகுந்த பிரயத்தனம் எடுத்துவருவதாகவும் தெரிய வருகிறது.

தேடப்பட்டுவரும் மாணவரை விட, ஏற்கனவே பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கும் மாணவர்கள் தொகை அதிகமாகும்.

## மீண்டும் சீனிவிலை உயரும்

பெல்வத்த சீனி உற்பத்தி நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் சீனிக்கு மான்யம் வழங்குவதை நிறுத்தும்படி அரசாங்கத்துக்கு திறைசேரி ஆலோசனை வழங்கியுள்ளது. இதனால் சீனியின் விலை மீண்டும் உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம், பெல்வத்தை சீனி கூட்டு நிறுவனத்தோடு 25 வருட கால சீனிக்கொள்வனவுக்கான உடன்படிக்கையைச் செய்துள்ளது. தற்போது அரசாங்கம் ஒரு கிலோ சீனியை 40 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து, 34 ரூபாவுக்கு விற்பனை செய்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொலைபேசி பாக்கி 100 கோடி

இவ்வருடம் ஜூன் 30 ஆம் திகதி முடிவுவரை இலங்கையிலுள்ள தொலைபேசிப் பாவனையாளர்களால், கட்டப்படாது பாக்கியாகவுள்ள மொத்தத்தொகை 100 கோடி ரூபாவாகும் என தொலைதொடர்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

தனியார் பகுதியிலிருந்து 60 கோடியும், அரச பகுதியிலிருந்து 40 கோடி வரையும் பாக்கியாகச் செலுத்தப்படவுள்ளனவாம்.

## வெளியேறுமாறு மிரட்டல்

கடந்த புதன் கிழமை வெளியான பி.பி.சி. செய்தியின்படி அம்பாறையிலுள்ள சிங்களவர்கள் குடியெழும்புமாறு மிரட்டப்பட்டுள்ளனராம். இந்தியப் படை வெளியேறிய பின்பு நிகழ்ந்த இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

## கொழும்புச் செய்தி

— யாழ் குருவி —

### ஜன நெருக்கடி

கொழும்பு வீதிகளில் தற்போது பாதசாரிகள் திரிவது மிகவும் கஷ்டமானதொன்றாகி விட்டது. அந்தளவுக்குப் புதியவர்களின் தொகை கொழும்பில் கூடியுள்ளது. அரச – தீவிரவாதப் பயங்கரவாதத்துக்கு அஞ்சி தென்னிலங்கைப் பகுதியிலுள்ள கிராமப்புறங்களிலிருந்து ஏராளமான சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் தலைநகர் வந்துள்ள அதேவேளையில், வட – கிழக்குப் பகுதிகளிலிருந்தும் ஏராளமான தமிழ் யுவதிகளும் இளைஞர்களும் இங்கு வந்து திரிவதால், தலைநகர் வழமைக்கு மாறான நெரிசலுக்குள்ளாகியுள்ளது.

### வந்தவர்கள் யார் ?

கொழும்பில் நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள வட பகுதி முதலாளியொருவரை திடீரென ஆயுதபாணிகளாகச் சூழ்ந்து கொண்ட சிலர், தாம் ஜே. வி. பி. என்றும் தமக்கு 10 லட்சம் தரும்படியும் பயமுறுத்தினராம். இவர் ஒருவாறு கடையிலிருந்து தப்பியோடி அரசமரச் சந்தியில் நின்ற பொலிஸாரோடு கடைக்கு வந்தபோது, அங்கு நின்ற ஆயுதபாணிகள் தாம் யாரென்பதை பொலிஸாருக்கு சூக்குமமாகத் தெரிவிக்கவே, பொலிஸார் அவ்விடத்தை விட்டு அகன்றனராம். பின்னர் ஆயுதபாணிகளால் அழைத்துச் செல்லப்பட்ட முதலாளிக்கு என்ன நடந்ததென்று தெரியாதாம்.

### ஸ்தலத்திலேயே 'விமுக்தி'

கொழும்பில் யுத்தநிறுத்த முடிவுக்குப்பின் ராணுவ நடவடிக்கைகள் மீண்டும் முடுக்கிவிடப்பட்டுள்ளன நகர வீதியெங்கும் கடற்படையினரே காணப்படுகின்றனர். ஜன நெருக்கடிமிக்க புறக்கோட்டை வீதிகளில் பாதசாரிகள் பரிசோதனை தீவிரம்பெற்றுள்ளது. ஜே.வி.பி.யினர்எனச் சந்தேகிக்கப்படுவோர், முடிச்சுமாறிகள் எனக்கணிக்கப்படுவோர்,கைது செய்யப்பட்டு, அவ்விடத்திலேயே நையப்புடைக்கப்பட்டு இழுத்துச் செல்லப்படுகின்றனர்.

## தபாற்காரருக்கு மரண தண்டனை

அண்மையில் சீனாவில், தபால்களைத் திருடிய தபால்காரருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர் திருடியவை பிறநாட்டு தபாலில் வந்த 16800 அமெரிக்க டொலர், 2500 முத்திரைகள், இன்னும் 100 வாழ்த்துமடல்கள் ஆகியவையே.

இது பற்றி ஆசிரியத் தலையங்கம் எழுதிய "சண்டே ரைம்ஸ்" இலங்கையிலும் இத்தகைய வேலையில் ஈடுபடுவோருக்கு இது ஒரு பாடமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளது.

## பீகாரில் இந்து – முஸ்லிம் கலவரம்

பீகார் மாநிலத்தில் பகல்பூரில் இடம் பெற்ற இந்து–முஸ்லிம் கலவரத்தில் 200க்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

பகல்பூர் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள கிணறொன்றில், 22 சடலங்கள் மிதந்ததாகத் தெரியவருகின்றது. இவை பல்கலைக் கழக மாணவருடையதாக இருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்ற முஸ்லிம்கள்மீது கும்பல் ஒன்று தாக்கிய போது, நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், வீடுகளும், வியாபார நிலையங்களும் எரிக்கப்பட்டும், சேதப்படுத்தப்பட்டதாகவும் இந்தியாவில் இருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

நிலைமையை இராணுவத்தினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

# வெளிநாடு செல்லும் இளைஞர்களே சிந்தியுங்கள்

சமூகத்தில் வயதில் முதிர்ந்தவன் என்ற முறையிலும், எம்மவரது நிலைமையை ஜீரணித்துக் கொள்ள முடியாத காரணத்தாலும் இக்கடிதத்தை வரைகின்றேன். யாரையும் கேலிசெய்யவோ அன்றேல் நையப்புடைக்கவோ இம்மடலை வரையவில்லை.

எமது சமூகத்தின் பொருளாதார நிலைமையினாலும், சிக்கல் நிறைந்த சமூக அமைப்புக்களினாலும், போராட்ட சூழ்நிலையாலும் நீங்கள் வெளிநாடு சென்றீர்கள்.

உங்களில் பலர் மூடைமூடையாகப் பணத்தை எங்களிற்கு அனுப்பி பொருளாதார முடையைத் தீர்த்தீர்கள்.

ஆனால் மனித நாகரிகத்திற்குப் புறம்பான முறையிலும், மனித வர்க்கத்தைப் பூண்டோடு அழிக்க முனைந்து நிற்கும் போதைவஸ்துகளை விற்பனை செய்வதன் மூலமும் உங்களில் சிலர் பணம் சம்பாதிக்கின்றார்களாம். அப்படிப்பட்ட முறைகளில் அதாவது, போதைவஸ்துக் கடத்தலாலோ, திருட்டுத் தொழிலாலோ சம்பாதித்திருந்தீர்களானால் அப்பணம் எமக்குத் தேவையில்லை. அப்பணம் உங்கள் கறைபடிந்த கைகளால் எண்ணப்பட்ட கறைபடிந்த, மனச்சாட்சிக்குப் புறம்பான பாவத்தாள்கள். அண்மையில் கூட ஆட்டுத்தலைகளுடன் ஊர்வலம் போனீர்களாமே. நீங்கள் மட்டும் ஊர்வலம் செல்லவில்லை. எமது இனத்தின் மானம், தலைகுனிந்த நம் பண்பாடும் ஊர்வலத்தில் வந்தன என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

சிறு தொழில்களில் தொற்றியிருந்து கொண்டு இலத்திரனியல் எஞ்சினியர் என்றும், மின்சார எஞ்சினியர் என்றும், கணணி மேதை என்றும், வங்கி முகாமையாளரென்றும் தம் பட்டம் அடித்து உங்கள் இனத்தவரையே ஏமாற்றி சீதனம் கூட்டி வாங்கித் திருமணம் செய்யாதீர்கள். இளம் அபலைப் பெண்களை ஆசைகாட்டி மோசம் செய்யாதீர்கள்.

சோ. பொன்னையா
அல்வாய்.


**திசை**
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 225/-
அரைவருடம்–ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.



Persons living abroad who are desirous of subscribing to the "THISAI" are kindly invited to place their subscriptions with the Circulation Manager, New Era Publications Ltd., 118, 4th Cross Street, Jaffna, Sri Lanka and not with any distributor or Agent.

Governing Councillor
New Era Publications Ltd.




## இழைதனில்

### காந்தியும் பிரிவினையும்

8/9/89 திசைய இதழில் வெளியான "சோழப் பெரும் பேரரசில் கிளர்ச்சிகளும் அடக்குமுறைகளும்" என்ற கட்டுரையை எழுதிய திரு. செ. கிருஷ்ணராசாவுக்கும் 29/9/89 திசைய இதழில் "காந்தியும் பாகிஸ்தான் பிரிவினையும்" என்ற ஆக்கத்தினைத் தந்த யசோதா பத்மநாதன் அவர்கட்கும் எனது பாராட்டுதல்கள்.

இவ்விரு விடயங்கள் பற்றியும் நான் இதுவரை கொண்டிருந்த கருத்துக்களை மீளாய்வு செய்வதற்கு இக்கட்டுரைகள் உதவியுள்ளன என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

காந்தியின் ராம ராச்சியக் கொள்கை பாகிஸ்தானை உருவாக்கியதென்பதை பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் சிங்கள பௌத்த ராச்சியத்தை உருவாக்க விரும்புபவர்கள் நன்கு அறிந்து அறிவு பெற வேண்டும்.

— க. பீற்றர்
சாவகச்சேரி.

### ஜே.வி.பி. தடை இலக்கியத்துக்கு நல்லது

'ஜே.வி.பி. இனால் இந்தியப் பொருட்களுக்குத் தடை விதிக்கப் பட்டது ஈழத்து இலக்கிய உலகுக்கு நன்மைதான். இந்தியாவில் வெளிவருபவையெல்லாம் நச்சிலக்கிய இதழ் அல்ல. மஞ்சரி, கலைக்கதிர், கலைமகள், கோகுலம், ரத்னபாலா போன்ற சிறந்த இதழ்களும் வெளிவருகின்றன. ஆனால் இவை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவது குறைவு. பொழுதுபோக்கான நச்சிலக்கிய இதழ்களே அதிகமாக இறக்குமதி செய்யப்படுகின்றன.

தனியார் கல்வி நிலையங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் குறைவடைந்ததும் ஒன்றாகும்.

எழுபதுகளுக்கு முன் இறக்குமதி செய்யப்பட்ட அறிவியல் இதழான கலைக்கதிர் இன்று இறக்குமதி செய்யப்படாமைக்கு, வாசிப்புப் பழக்கம் குறைவடைந்தமையே காரணமாகும்.

இன்று ஈழத்திலிருந்து அறிவியல் இதழ் என்று சொல்லக் கூடியதாக ஒன்றும் வெளிவருவதில்லை. 'திசை' ஒரு அறிவியல் இதழ் ஒன்றை வெளியிட வேண்டுமென்பது எனது வேண்டுதலாகும்.

த. கலாமணி
கரவெட்டி.

### காத்தவராயன் நாடகம்

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தால் 23-24/9/89 திகதிகளில் மேடையேற்றப்படவிருந்த காத்தவராயன் நாடகம் எதிர்வரும் 11.11.89 சனிக்கிழமை, யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் (முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கும்) இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


**மணமக்கள் தேவையா?**

எம்மிடம், எல்லாச் சாதி, சமயத்திலும், மணமக்கள் இருக்கிறார்கள்: மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.



உ
காலம் பெறுமதியானது
துரித சலவைக்கும்
தூய வெண்மைக்கும்

**மில்க்வைற்**
**சலவைப்பவுடர்**

துணை புரிகிறது.
சலவைக்கு அடக்கமான 50 கிறும் பைக்கற்விலை ரூபா 2/75 மட்டுமே.
50 கிறும் வெற்றுப் பைக்கற் 30 அனுப்பி ஒரு அழகிய கைலேஞ்சியைப் பெறுங்கள்

**மில்க்வைற்**
யாழ்ப்பாணம்.



*A/L PASSED?*
*GO TO* **WEST GERMANY** *FOR HIGHER STUDIES*

For details Contact personally or write with M. O/P. O for Rs. 15/- to Mr. A. A. POTHYNAR (Director)

**JAFFNA ACADEMY OF LANGUAGES**
**25, St. Patrick's Road,**
**JAFFNA.**



**PATRICIAN Institutes**

தொழினுட்ப பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Computer Programming Course**
PATRICIAN INSTITUTES AND BUSINESS PROMOTORS (PVT) LTD. } JOINT VENTURE

**Word Processing**
Duration—3 Months

**Lotus 1—2—3 Spread Sheet Analysis**
Duration—3 Months
Commence—15-11-89
Week Days Classes— (Theory & Practicals)

**Lecturers** — Miss M. Varatharajah - Management Accountant Passed Finalist C.I.M.A. (Lon.)
AND
Mr. R. N. Varendran A. C. A.

**Data Processing and Basic Language**
Duration —3 Months (Weekend Classess)
Commence—04-11-89
Lecturer —Mr. Sundrarajah B. Sc. (Eng.) Hons (U. K.) M.C.S.

Equipment Used—Laser XT/2, XT/3, 386 (I. B. M. Compatibles) and Apple II Computers

பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

**Diploma Course in Draughtsmanship**
Subjects: (i) Darughtsmanship Including Reinforced Concrete Detailing,
(ii) Building Technology
(iii) Land Surveying (Theory & field work)
(iv) Builders Quantities & Estimating.
Duration—6 Months
CITY AND GUILDS OF LONDON INSTITUTE.

**Quantity Surveying**
Part I (6 Months) Part II (6 Months)

**Electrical Wiring** - *மின்சார இணைப்பு*
(3 மாதகால பயிற்சி)

**Motor Mechanism** - *மோட்டர் மெக்கானிசம்*
(6 மாதகால பயிற்சி)

**Motor Winding** - *மோட்டர் வைண்டிங்*
(4 மாதகால பயிற்சி)

**Arc Welding** - *மின் ஒட்டுவேலை*
(3 மாதகால பயிற்சி)

**Lathe Operation** - *கடைச்சல் இயந்திர இயக்கம்*
(3 மாதகால பயிற்சி)

மேற்படி பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.
கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

மேலதிக விபரங்கட்கு,
Registrar,
Patrician Institute of Higher Studies
59, St. Patrick's Road, Jaffna.

# வன்னிக்குரிய இறுமாப்பும் பண்டாரவன்னியனும்

உலகின் பல்வேறு பகுதிகளும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில், ஒருசில நபர்களால் முக்கியத்துவத்தை அடைந்து விடுகின்றன. அந்த வகையில் இலங்கையின் வன்னிப் பிராந்தியமானது, பண்டார வன்னியனின் ஆளுகையின் கீழிருந்த 19 ஆம் நூற்றூண்டின் முன்னரைப் பகுதியில் ஒரு முக்கியத்துவமான பிரதேசமாக முத்திரை குத்தப்பட்டது. அந்த முத்திரை இலங்கை வரலாற்றில் அழிக்க முடியாத அளவிற்கு ஆழமாகப் பதிக்கப்பட்டுவிட்டது என்பதும் மறுப்பதற்கில்லை.

கி.பி. 13 ஆம் நூற்றூண்டில் யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கு முன், தென்னிந்திய படையெடுப்பாளர்களால் சிங்கள அரசர்கள் காலத்துக்குக் காலம் பாதிக்கப்பட்டு வந்தனர். அந்நிலையில் தென்னிந்திய மக்களுக்கும் இலங்கையின் வடபகுதி மக்களுக்குமிடையில் இருந்த உறவு, சிங்கள மன்னர்களின் வடபாகம் நோக்கிய படையெடுப்புகளுக்கு வழிவகுத்துக் கொடுத்தது. இச் சூழ்நிலையில் தான் வன்னிப் பிராந்தியம் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. சிங்களப் படையெடுப்பாளரின் வடபகுதித் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு ''தாக்கத் தணிப்பு'' வலயமாக அது இடம்பெற்றது. இதனுல் வன்னிச் சிற்றரசர்கள் சிங்களப் படையெடுப்பாளரை எதிர்த்துத் தொடர்ந்தும் போராடி வந்தனர். இந் நடவடிக்கை, யாழ்ப்பாணப் பகுதியில் அமைதியைக் கொடுத்ததோடு, யாழ்ப்பாண இராச்சியம் ஸ்திரமடையவும் வழி வகுத்தது.

வன்னிச் சிற்றரசுகளின் தொடர்ச்சியான வளர்ச்சியின் உச்சக்கட்டமாக பண்டார வன்னியனின் ஆளுகைக்குட்பட்டிருந்த காலப்பகுதி சிறப்பிடம் பெறுகிறது. இவன் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற மிக முக்கியமான விடுதலை வீரனாக சிறப்பிடம் பெறுகிறுன். போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய இரு அந்நிய சக்திகளாலும் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படவில்லை. இறுதியாக பிரித்தானியர் ஆளுகையின்கீழ் 1815 இல் கைப்பற்றப்பட்டது. ஆனுல், வன்னிச் சிற்றரசு, 1831 இல் தான் பிரித்தானியரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அந்த வகையில் பிரித்தானியர்களால் கைப்பற்றப்பட்ட இலங்கையின் இறுதி வலயமாகவும் வன்னி சிறப்பிடம் பெறுகிறது. அவ்வாறு அந்நிய ஆட்சியாளருக்கு அடிபணியக்கூடாது என்ற சுதந்திர உணர்வுதான்,''அடங்காப்பற்று'' என வர்ணிக்கப்படுகிறது.

பிரித்தானியரின் துப்பாக்கிகளின் இலக்குகளுக்கு இணையாக பண்டாரவன்னியன் அணியினரின் வாள் வீச்சு இருந்தது. ஓர் ஆசிரியர் பண்டாரவன்னியனின் வீரத்தைக் குறிப்பிடும்போது; ஒரே வாள் வீச்சில் அறுபது பேரின் தலைகளை வெட்டி வீழ்த்தியதாகக் குறிப்பிட்டுள்ளார் இவ்வாறு காட்ட முனைவது சிறந்த வாள் வீரனான பண்டாரவன்னியனின் உண்மையான வீரத்தைக் குறைத்து விடுமென எண்ணத் தோன்றுகிறது.

வன்னிப் பிராந்தியத்தின் அடர்ந்த காடுகளும், பயங்கர காட்டு விலங்குகளும் அம்மக்களின் வாழ்வில் அச்சுறுத்தலாக அமைந்த காரணிகளாகும். இப்புவியியற் காரணிகளே வன்னி மக்களை ஏனைய சமூக அமைப்பிலுள்ள மக்களைவிட ஒருவித்தியாசமான ஓர்மமுள்ள மக்களாக பிரித்துக் காட்டுகிறது.

பண்டாரவன்னியன் பிரித்தானியர்களால் வெற்றி கொள்ளப்படுவதற்கு, காக்கை வன்னியன் என்ற அப்பிரதேச நபர் ஒருவனே காரணமென பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஒட்டுசுட்டானுக்கு அண்மையிலுள்ள பகுதியொன்றில் வெள்ளையர்களால் பண்டாரவன்னியன் வெற்றி கொள்ளப்பட்டதற்கு அத்தாட்சியாகப் பொறிக்கப்பட்ட ஒரு கல், நாட்டப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே அப்பகுதி 'கற்சிலைமடு' என்று பெயரையும் பெற்றது.

எவ்வாறெனினும் இதுவரை பண்டாரவன்னியனதுஒருமுழுமைப்படுத்தப்பட்ட வரலாறு எழுதப்படவில்லையென்றே சொல்லலாம். ஆனுல் இவ்வாருகத் தமிழ் மன்னர்கள் பற்றிய வரலாறு எழுதப்படாமல் இருப்பதுபோல, எந்தவொரு சிங்களச் சிற்றரசனது வரலாறும் இருக்கவில்லை. அம் மன்னர்களுக்கு சிங்கள வரலாற்ருசிரியர்கள் உரிய முக்கியத்துவம் கொடுத்திருப்பதை சிறப்பாகக் காணமுடிகிறது. எனவே எதிர்காலத்திலாவது, தமிழ் மன்னர்கள் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்து வரலாற்றுத் தேக்க நிலையானது தகர்க்கப்பட வேண்டும்.

(31/10/89 இல் கற்சிலை மடுவில் நடைபெற்ற பண்டார வன்னியன் விழாவையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.) □

□ ஏ. வி. என். □

# அமெதித் தொகுதியில் இரு காந்திகள்

நொவம்பர்மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், போட்டியிட உத்தரப்பிரதேஷில் உள்ள அமெதித் தொகுதியில் ராஜீவ் காந்தி தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார். இத்தொகுதியில் இவரை எதிர்த்து ஜனதா தளத்தின் சார்பில் மகாத்மா காந்தியின் பேரன் ராஜ்மோகன் காந்தி போட்டியிடுகிருர்.

அமெதித் தொகுதியில் ராஜீவ்போட்டியிடுவதற்கு ஒரு பெரும் பின்னணி உண்டு. உத்தரப்பிரதேஷ்தான் இந்திய மத்திய அரசின் தலைவிதியை நிர்ணயிப்பதில் பெரும் பங்கெடுக்கும் மாநிலம். அதிலும் அங்குள்ள அலகபாத் தொகுதி தான் இந்தியாவிற்கு பல தடவைகள் பிரதம மந்திரிகளை வழங்கிய தொகுதி. ஆனுல் 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது அலகபாத் தொகுதியில் இந்திரா காந்தியை ராஜ் நாராயணன் தோற்கடித்தார். இத்தோல்வியின் பின்பு இந்திராகாந்தி ஒரு முடிவுக்கு வந்தார். அதாவது நாட்டில் தமக்கு எதிரான இத்தகைய அதிருப்தியான சூழலிலும் தமது ''குடும்பச் சொத்துப்போல'' ஒரு தொகுதியையாவது பேணவேண்டும் என்பது.

இதற்காக உத்தரபிரதேஷில் ஏதாவது ஒரு தொகுதியை தமது முழுச் செல்வாக்குக்கும் உரிய வகையில் வளர்த்துவிடவேண்டும் என இயங்கினுர். அதற்கு ஏற்ற தொகுதியாக மிகப் பின்தங்கிய பிரதேசமாக இருந்த அமெதித் தொகுதியைத் தேர்ந்தெடுத்தார். சஞ்சீவ்காந்தி இத்தொகுதியை தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் பெரிய அளவில் அபிவிருத்தி செய்தார். அது போதிய மின்னிணைப்புக்கள், வைத்தியசாலைகள், ஏனைய சேவை நிலையங்கள், போக்குவரத்துத் தொடர்புகள் எனப் பலவகையிலும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதனுல் இத்தொகுதி நேரு குடும்பத்தின் தனிவாரிசு உரிமைக்குரிய சொத்துப் போல ஆகியுள்ளது. எனவே நாட்டில் இந்திரா கொங்கிரஸிற்கு எத்தகைய எதிர்ப்பிருந்தாலும் அமெதித் தொகுதியில் நேரு குடும்பம் வெற்றி வாய்ப்பை அதிகம் காப்பாற்றக் கூடிய வாய்ப்புண்டு. □

# மலையகம் என்ற பெயர்
## எப்படி ஏற்பட்டது?

மலையகம் என்பது பூகோள அடிப்படையில் பயன்படுத்தப்படும் சொல் அல்ல. மலைகளடர்ந்த பிரதேசங்களில் தோட்டங்கள் திறக்கப்பட்டு காசுப்பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1828 ஆம் ஆண்டிலிருந்து கோப்பியும் 1858 ஆம் ஆண்டின் பின்னர் தேயிலையும் பெருவாரியாகப் பயிரிடப்பட்டன. இத்தோட்டங்களில் உழைப்பதற்கென ஆரம்பகாலந்தொட்டே தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர். இவ்விதம் கொண்டு வரப்பட்ட இந்திய வம்சாவழியினர் ஆரம்பகாலம் முதலே ''தோட்டக் காட்டான்கள்'' என்றே குறிப்பிடப்பட்டனர்.

தோட்டக் காட்டைச் சேர்ந்தவர்கள் என்பதே இதன் பொருள். புல்லுவெட்டுக்காடு, கவ்வாத்துக்காடு, புதுக்காடு, மட்டக்காடு என்ற பிரயோகங்கள் இதை உணர்த்தும். இந்தச் சொல்லின் உண்மையான அர்த்தம் தோட்ட நிலத்தைச் சார்ந்தவர்கள் என்பதாக இருந்தாலும், எல்லா மட்டங்களிலும் புறக்கணிக்கப்பட்ட, எல்லா விதங்களிலும் ஒதுக்கப்பட்ட, எல்லா அளவு கோல்களிலும் பின்தங்கிப் போன ஒரு சமுதாயத்தினரைக் குறிக்கும் இழிசொல்லாகவே இது பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. எனவே தமது மனுேபாவத்தில் மாற்றம் தேடிநின்ற 'தோட்டக் காட்டின்' இளவல்கள் ''மலையகம்'' என்ற சொல்லைப் பயன்படுத்துவாராயினர்.

மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை அவர்களே இந்தச் சொல்லை முதன்முறையாக தனது எழுத்துக்களில் பயன்படுத்தியவராவார். உண்மையில் அது அவரது ஆங்கிலக் கட்டுரையில் இடம்பெற்ற 'ஹைலேண்ட்' என்ற சொல்லின் தமிழ்ப் பெயர்ப்பாகும். அவரது ஆங்கிலக் கட்டுரை தமிழாக்கப்பட்டு வெளியிடப்பட்டவேளை, மலைநாடு என்ற சொல் பிரயோகிக்கப்பட்டது. அதன் பிரயோகம் ''குறவர்கள் வாழும் இடமல்லவா மலைநாடு?'' என்று சிலரைக் கேலி பண்ண வைத்தாலும், பலரையும் கவ்ருவதாயிற்று.

தங்களை அதுகாலம் வரை இந்திய வம்சாவழியினரென்று கூறிவந்தவர்கள் 1947 இல் தங்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதன் பின்னர், தங்களை இந்தியாவோடு தொடர்புபடுத்தாத, அதே நேரத்தில் தங்களின் தனித்துவத்தைப்பேணும் ஒரு குறியாக இந்தச் சொல்லைப் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

நாங்கள் இந்தியத் தமிழர்களல்லர்; கண்டியத் தமிழர்கள் என்றழைக்கப்படுவதையே விரும்புகின்ரேம் என்றும், சிலர் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட 1947 க்குப் பின்னர் மேடைகளில் பேசத் தலைப்பட்டனர்.

தமது சமூகப்பிரச்னையையும், சேவை மனப்பான்மையையும் வெளிப்படுத்த முனைந்த பலரும் மலைநாடு என்ற சொல்லாலேயே கவரப்படலாயினர். ''மலைநாடு'' என்ற பெயரில் 1950 களில் ஓர் ஏடு, நாவலப்பிட்டியிலிருந்து கணக்கப்பிள்ளைமார் சங்கத்தினரால் வெளியிடவும்பட்டது; ''மலைநாட்டுக் காந்தி'' என்று தங்கள் சமூகத்தைச் சார்ந்த தலைவர் கே. இராஜலிங்கத்தைப் பெருமைப்படுத்தினர்; ''மலைநாட்டு எழுத்தாளர் சங்கம்'', ''மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம்'' என்றெல்லாம் மன்றங்கள் தோன்றின. 1960 இன் நடுப்பகுதிவரை இந்த நிலைமை நீடித்தது எனலாம்.

இந்த நிலையில் 'மலைநாடு' என்ற சொல் அரசியல் சாயம் பூசப்பட்டு தொண்டமான் தலையில் அமைக்கப்படவிருக்கும் தனித்தமிழ் ராஜ்யத்தைக் குறிக்கும் சொல்லாக அர்த்தப்படும் அபாயமும் தோன்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகள், நாடாளுமன்றத்தில் இந்த நிலைமையை உருவாக்கினர். தவருக விளங்கிக் கொள்ளும் நிலைக்கு உள்ளாகாமல் தவிர்த்துக்கொள்ள முயன்ற பலரும், மலையகம் என்ற சொல் பரந்துபட்ட பாவிப்புக்குவரக் காரணமாக அமைந்தனர்.

இன்று வானெலி, தொலைக்காட்சியில் வானிலை அறிவிப்புக்குப் பயன்படும் சொல்லாக இது ஏற்கப்பட்டுள்ளது. எனினும் மலையக மக்கள் என்று கூறப்படும்போது அது உணர்வு பூர்வமான சொல்லாகவே கருதப்படுதல் வேண்டும். இந்திய வம்சாவழி மக்கள் இலங்கையில் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தங்களை இப்படி இனம் காட்டுவதையே விரும்புகின்றனர். பலாங்கொடையிலிருந்து 1978 இல் ''மலையகம்'' என்ற பெயரிலும், கொழும்பிலிருந்து ''மலைமடல்'' என்ற பெயரிலும் வெளியிடப்பட்டிருக்கும்– இந்திய வம்சாவழித் தமிழர்களால் வெளியிடப்பட்டிருக்கும் – சஞ்சிகைகள் இதை மெய்ப்பிக்கும். இலங்கையிலிருந்து தமிழகத்துக்குப் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் குடிபெயர்ந்தவர்கள் கூட இந்தியாவில் தங்களை ''மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம்'' என்று பெயரிட்ட அமைப்பின் கீழேயே இன்று இனம்காட்டத் தொடங்கியிருக்கின்றனர். □

□ சாரல் நாடன் □

## கல்வித்துறையில் இன்று

# நாம் எங்கே போகிருேம்?

''செந்தமிழைக் கேட்பதற்கு தெற்கு நோக்கி நகர வேண்டும்''

''யாழ்ப்பாணத்தில் எங்கேயாவது ஒரு இடத்தில் வழுக்கி விழுந்தால் யாராவது ஒரு பண்டிதர் மேல்தான் விழவேண்டும்''

மேற்கூறிய இரண்டு கருத்துக்களும் ஈழத்துத் தமிழ் மக்களது — குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்திற்குக் கௌரவம் கொடுத்த, அமரர் கல்கி அவர்களது பொருள் பொதிந்த வாக்கியங்களாகும். நீண்ட நெடுங்காலமாகவே தமிழ்மக்கள் கல்வியை ஒரு முதுசொத்துப்போல் பேணி வருகிருர்கள்.

### எமது கல்விப் பாரம்பரியம்

ஈழத்தில் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எமது ஆரம்பகால கல்வி வளர்ச்சியின் போது எங்கள் நாட்டு அறிஞர்கள் தமிழ் நாட்டிலும் சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் கல்வியில் முன்னணியில் திகழ்ந்து இருக்கிருர்கள். சி. வை தாமோதரம் பிள்ளை, கரோல் விஸ்வநாத பிள்ளை போன்றவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தலைசிறந்த முதல் மாணுக்கர்களாக திகழ்ந்தார்கள். ஆறுமுகநாவலர், கலாயோகி ஆனந்தகுமாரசாமி, சுவாமி விபுலானந்தர், வண. பிதா தனிநாயக அடிகளார் போன்ருேர் இலங்கைக்கு வெளியே கல்விப் பேராசான்களாக விளங்கி இலங்கைத் தமிழர்களின் கல்விப் பாரம்பரியத்தின் புகழ்பூத்த அறிஞர்களாக விளங்கினுர்கள்.

### தமிழகத்திற்கு வழிகாட்டி

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் குருவாக விளங்கிய யாழ்ப்பாணத்து சுவாமி அவர்கள் இலங்கையின் வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவராவர். அவருக்கு வியாபாரி மூலையில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம் இன்றுமுள்ளது. தன் அறிவுக்கண்களைத் திறந்த யாழ்ப்பாணத்துச் சுவாமியை மனதில் கொண்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கவிதை இயற்றும்போது, ''யாழ்ப்பாணம் வையகத்தின் கண்'' என்ருர். தமிழ்த் தென்றல் கல்யாண சுந்தரனுர் அவர்களது குருவாக விளங்கியவர், வடமராட்சியைச் சேர்ந்த சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்களாவர். இவர் திரு. வி. க. அவர்களது ஆளுமையை வெளிப்படுத்திய ஆசான் எனப் போற்றப்படுகின்ருர். முன்னுள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணு அவர்களது பேராசிரியராக இருந்த அவருக்கு உபகாரச் சம்பளம் பெற்றுக் கொடுத்துக் கல்வி கற்பித்தவர் ஏழாலையைச் சேர்ந்த ஹென்ஸ்மன் என்ற பெரியாராவர்.

### ஆங்கில இலக்கிய உலகில்

பல ஈழத்துத் தமிழ்ப்பெரியார்கள் ஆங்கில இலக்கிய உலகத்தில் அரும்பணியாற்றி சர்வதேசப் புகழ்பெற்று இருக்கிருர்கள். உடுப்பிட்டியைச் சேர்ந்த பாரிஸ்டரான அழகு சுப்பிரமணியம் அவர்கள் ஆங்கிலச் சிறுகதை உலகில் புகழ் பெற்ற எழுத்தாளராவர். இவரது Big girl, மற்றும் Closing Time போன்ற சிறுகதைகளின் களம் தமிழ் மக்களின் பெருமைகளை மேலைத்தேயத்தவருக்கு எடுத்து விளக்கியது. இன்றும் அவை ஆங்கில இலக்கிய உலகில் அமர இலக்கியங்களாக விளங்குகின்றன. இதே போல அச்சுவேலியைச் சேர்ந்த Poet தம்பிமுத்து அவர்கள் ''London Poetry'' என்ற சஞ்சிகையை வெளியிட்டார்கள். ஆங்கிலக் கவிதை உலகில் அவர்கள் அழியாத இடம் பிடித்துள்ளார்கள். தமது பெயருக்கு முன்னுல் பலர் புலவர் என்றும் கவிஞர் என்றும் அடைமொழிகளைப் போட்டுக் கொண்டா

□ நேதாஜி □

லும் Poet என்ற ஆங்கிலச் சொல்லை ஆங்கிலக் கவிதா மண்டலம் தம்பிமுத்து என்ற ஒரேயொரு தமிழருக்கே வழங்கி கௌரவித்துள்ளது. அண்மைக்காலத்தில் அமரரான மலையகக் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களும் ஆங்கில இலக்கிய உலகிற்குப் பணியாற்றி ஈழத்தமிழருக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

### முதலில் விழுந்த தடைக்கல்

கடந்த இரு தசாப்தங்களுக்கு முற்பட்ட காலத்தில் வருடம் தோறும் ஏகப்பட்ட தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுவதும், பிரதிவருடமும் பல தமிழ் மாணவர்கள் பொறியியலாளர்களாகவும் பட்டதாரிகளாகவும் தோற்றம் பெற்ருர்கள். 1970ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தால் அமுல் செய்யப்பட்ட இனரீதியான தரப்படுத்தல் முறையானது, தமிழ் மக்களின் உயர் கல்வியில் பெரும் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. அதே நேரத்தில் இத்தகைய இனரீதியான பாரபட்சங்களுக்கு எதிராகப் போராடி, கல்வித் துறையில் சிறந்த விளைச்சலை அறுவடை செய்ய வேண்டிய சூழ்நிலைக்குப் புறம்பாக — முற்றிலும் பிரதிகூலமாக எமது கல்விமான்கள் செயற்பட்டமையால், எமது கல்வி வளர்ச்சி இரட்டிப்பான பாதிப்புக்குள்ளானது. அதாவது ஒடுக்குமுறையாளன் அறிமுகப் படுத்திய தரப்படுத்தல் திட்டம் எமது கல்வித்துறையின் வீழ்ச்சிக்கு வித்திட்ட அதே நேரத்தில், இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு எமது கல்வியாளர்கள் எமது கல்வி வளர்ச்சியில் காட்டிய அசிரத்தையானது, எமது கல்வி வளர்ச்சியைத் தடைப்படுத்தி வீழ்ச்சியைத் துரிதப்படுத்தியது.

### முன்னேடியாக வாழ்ந்த கல்லூரி அதிபர்கள்

கடந்த காலங்களில் எமது மக்கள் மத்தியில் வாழ்ந்த பல கல்லூரி அதிபர்கள் ஆற்றிய பணிகளை இன்றும் எமது மக்கள் நினைவில் வைத்துள்ளார்கள். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் பூரணம்பிள்ளை, சென்ற்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருளானந்தம், சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா. லோங் அடிகளார், யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் மதிப்பிற்குரிய பிக்னெல் அடிகளார், யாழ். மத்திய கல்லூரி அதிபர் தம்பர், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வீரசிங்கம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஒறேட்டர் சுப்பிரமணியம், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஹண்டி பேரின்பநாயகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் சபாலிங்கம், பி. எஸ். குமாரசாமி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபராகவிருந்த ஐ பி. துரைரத்தினம் இப்படிப் பல முன்னுள் அதிபர்களை மக்கள் இன்றும் நினைவில் வைத்துள்ளார்கள். ஆனுல் இன்ருே நிலைமை தலை கீழாகவுள்ளது. பல புகழ் பெற்ற முன்னணிக் கல்லூரிகளின் தற்போதைய அதிபர்கள் யார் யார் என்பதைத் துருவித்துருவி ஆராய்ந்தே கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. வண.பிதா.லோங் அடிகளார் யாழ்ப்பாணப்பொதுசன நூல்நிலையம் ஒன்றை அமைக்க ஆற்றிய பணிகளைக் கௌரவிக்குமுகமாக, யாழ்ப்பாணப் பொதுமக்கள் யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையம் முன்பாக ஒரு சிலை அமைத்துக்கௌரவித்து இருக்கிருர்கள். அதிபர் வீரசிங்கம் அவர்கள் கூட்டுறவு துறைக்கு ஆற்றிய பணிகளின் சின்னமாக வீரசிங்கம் மண்டபம் விளங்குகின்றது. அமரர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களது கல்விப்பணிகளோடு அரசியல் சமூகப்பணிகளும்விதந்துபாராட்டப்படுகின்றன. ஆனுல் இன்று எத்தனை கல்லூரி அதிபர்கள் சமயப்பணிகளிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு உழைக்கிருர்கள்?

யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் மட்டுமே ஒரு பத்திரிகையாளராகவும் ஆராய்ச்சி எழுத்தாளராகவும் விளங்குகின்ருர்கள். முன்னுள் யூனியன் கல்லூரி அதிபர் பாலசுந்தரம் அவர்கள் ஒரு சிறுகதை எழுத்தாளராவர். வேறு பல கல்லூரி அதிபர்கள் ஒய்வுபெற்ற பின் அஞ்ஞாதவாசம் புரிகிருர்கள். பலர் நாட்டைவிட்டுஓடி மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தங்கி சுகபோக வாழ்க்கை நடாத்தும் தமது பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் வாழ்கிருர்கள். இப்படிப்பட்ட பெரிய மனிதர்களின் சுற்றுப்புற சூழ்நிலைபற்றி அக்கறையில்லா வாழ்வு, தமிழ் மக்களின் கல்விப் பாரம்பரியத்தின் வீழ்ச்சிக்கு அடித்தளமாயிற்று.

### இன்றைய நிலை

அடுத்ததாக இன்றைய அசாதாரண அரசியல் சூழ்நிலை எமது கல்விச் சூழலை வெகுவாகச் சீர்குலைத்துள்ளது. இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நிலைமையைப் புரிந்துகொண்டு எமது கல்வியாளர்கள் ஒன்றுகூடி கலந்துபேசி பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இந்த அவலநிலை ஏற்பட்டிருக்க வழி பிறந்திருக்காது. எமது மூத்த கல்வியாளர்கள் ஒருங்கிணைந்து சரியான முறையில் ஆரம்ப முதலே செயல்பட்டு இருந்தால் இந்த சீர்குலைவுகளைத் தவிர்த்திருக்கலாம். அவ்வப்போது மாறும் சூழ்நிலைக்குத் தக்கபடி எமது கல்விவளர்ச்சிப் போக்குகளை சரியான பாதையில் நெறிப்படுத்தியிருக்கலாம். ஆனுல் கடந்த பத்து ஆண்டு காலத்தினுள் ஒரு கல்வியாளர்கள் கருத்தரங்குகளோ அல்லது பெற்ருேர் – ஆசிரியர்கள் மாணவர்கள் - கல்வியாளர்கள் சந்திப்புக்களோ நடந்தது கிடையாது. இவ்வாருன அசிரத்தை காரணமாக இன்று எமது கல்விச் சூழ்நிலை சிதறிச் சீர்குலைந்துள்ளது. இதனுல் இன்னும் சில வருடங்களில் எமது சமூகத்தில் வேறுபல வடிவங்களில் இந்த சீரழிவின் எதிரொலி வெளிப்படப்போகிறது.

### ஆசிரிய சேவையின் மகத்துவம்

ஆசிரியபணி சர்வதேச ரீதியாக ஒரு சேவையாகக் கருதப்படுகிறதே தவிர வேதனம் பெறும் தொழிலாகக் கருதப் படுவதில்லை. நெருக்கடியான காலகட்டங்களில் பலர் எவ்வித வேதனமும் பெருது இதனையொரு தொண்டாக ஆற்றியுள்ளனர். புனித சேவையாகக் கருதியமையால் அவ்வாறு செய்தனர். யுத்த காலங்களில் இவ்வாறு ஆற்றப்பட்ட பணிகள் தான் வியட்னுமிலும் ஏனைய பல நாடுகளிலும் யுத்தம் முடிந்த பின்னர் ஒரு கௌரவமான கல்வி கற்ற சமுதாயம் மலரக் காரணமாயிற்று. 2 ஆம் உலகப் போரின்போது பிரிட்டன் மீது போர் தொடுத்த ஹிட்லர் இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களையும் பாடசாலைகளையும் பேணுமாறு தனது படைகளுக்கு உத்தரவிட்டான். பதிலுக்கு இங்கிலாந்தின் யுத்த கால பிரதம மந்திரியான சேர்ச்சில் ஜேர்மனியிலுள்ள ஹிட்டன் பேர்க், ஏடல் பல்கலைக்கழகங்களையும் ஏனைய கலைக்கூடங்களையும் யுத்தத் தவிர்ப்புப் பிரதேசமாகத் தனது படைகளுக்கு உத்தரவிட்டான்.

ஆனுல் இன்று ஈழத்தின் இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழரின் கல்வி வளர்ச்சி எப்படியிருக்கிறது? இன்று ஆசிரியப்பணி என்பது மணிக்கூடு பார்த்து கற்பிக்கும் தொழிலாகவும் கலண்டர் பார்த்து மாதச் சம்பளம் பெறும் வேலையாகவும் கணிக்கப்படுகிறது. கூலிக்கு மாரடிக்கும் கூடாரமாகப் பாடசாலைகளை மாற்றிய அந்தப் பெரிய மனிதர்கள் தான் யாரோ? ஆரம்பப் பாடசாலைகளை நடாத்தக்கூடிய இடங்களில் கூட நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு மாணவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு வாளாவிருக்கும் சமுதாய முன்னேடிகள் எத்தனை பேர்? தமது பணிகளின் மகத்துவத்தைக் காக்க பெற்ருேர் – ஆசிரியர் சங்கங்களையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களையும் அழைத்துக் கலந்து பேசி கல்வி வளர்ச்சிக்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தேக்க நிலையைப்போக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா? □

## தமிழ்த் தினப் போட்டிகள்

1989, 1990 ஆகிய ஆண்டுகளில் தமிழ்த் தினம் கொண்டாடுவது தொடர்பாக மத்திய இந்து சமய கலாச்சார அமைச்சும், முஸ்லிம் சமய கலாச்சார அமைச்சும் இணைந்து செயற்படுத்த; வட — கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்படி தினத்தைப் பள்ளிக்கூடங்களில் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

முறையே கொத்தணி, கோட்டம், மாவட்ட அடிப்படையில் தமிழ்த் தினப்போட்டிகள் நடைபெறும். இறுதியில் மாகாணங்களுக்கிடையில் போட்டிகள் இடம் பெறும். கொத்தணி, கோட்ட அடிப்படையில் போட்டிகள் நடைபெறவேண்டிய காலம் எப்போதோ முடிந்து விட்டதாம். சமீபகாலங்களில் மாணவரின் பாடசாலைவரவும் மந்தநிலையில் காணப்பட்டதால் உரியகாலத்தில் தமிழ்த்தினப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை.

## தேடிவந்த ஆசிரியர்

ஒருநாள் காந்தியடிகளிடம் இஸ்லாமிய வேலைக்காரன் ஒருவன், ''பாபு எனக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தால்தான் நான் நிறையப் போதிக்கமுடியும். எனக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தால் அரை வயிற்றுக்குக்கூட சாப்பிட முடியவில்லை'' என்று கூறினுன். உடனே காந்தி, ''கவலைப் படாதே, நான் உனக்கு தினந்தோறும் ஆங்கிலம் கற்றுத் தருகிறேன்'' என்ருர். ''மிக்க மகிழ்ச்சி பாபு, ஆனுல் என் வேலைகளை விட்டுவிட்டு நாள் தோறும் உங்களிடம் வரமுடியாதே.'' என்ருன்.

அப்படியானுல் தினசரி நானே உன் இடத்திற்கு வந்து கற்றுத் தருகிறேன். என்று கூறினுர். அதன்படியே, நாள் தோறும் நான்கு மைல் தோறும் நடந்து சென்று அப்பணியாளுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார் அவர். இச்சம்பவம் தென்னுபிரிக்காவில் நடந்தது.

தொகுப்பு – க. கனகராசா
ஆக்கம் – ''கிராமராஜ்யம்''

## அண்மைக்கால புலப் பெயர்வு

# சாதகமான ஓர் அம்சமே!

எமது நாட்டின் வடக்கு -கிழக்குப் பகுதிகளிலிருந்து அண்மைக் காலமாக ஏற்பட்டு வருகின்ற எம்மவரினது புலப் பெயர்வுகள் உண்மையாக இரண்டு அடிப்படைக் காரணங்களைக் கொண்டு தான் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. முதலாவதாக பொருளாதாரக் காரணிகளும் இரண்டாவதாக அரசியற் காரணங்களும் அடிப்படையாக அமைந்துள்ளன. அந்த வகையில் இப் பெயர்வுகள் எமது இன்றைய நோக்கில் பல நன்மைகளையே பெற்றுத் தருவனவாகவுள்ளன.

முதலில் பொருளாதார ரீதியாக இந்த வெளியேற்றம் என்பது பாதிப்பினைத் தரும் அம்சமாகக் காணப்படவில்லை. ஏனெனில் உள்நாட்டு பொருளாதாரம் என்பதில் வேலையின்மை என்பது உச்ச அளவாக எமது நாட்டில் காணப்படுவதுடன் வடக்கு - கிழக்குப் பகுதியில் பருவகால வேலையின்மை, கீழுழைப்பு என்பன பெருகி வந்ததுடன் சில அரசியல் சம்பவங்களினுல் பொருளாதாரத்தில் வேலை பெற்றுத் தரும் துறைகள் இல்லாது போனதுடன் வேலையிழந்தோர் தொகையும் கூடியதுடன் சுய தொழில் என்பது இயங்குவதற்கு உரிய சூழ்நிலையை இழந்தொரு நிலையில் வாழ்க்கைச் செலவினை சமாளிக்க வருவாய் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட வெளியேற்றம் என்பது ஏற்படுகின்றது. இந்த வகையில் பொருளாதாரத்தால் வேலை வழங்க முடியாதவர்களும், வேலை இழந்தவர்களும், கீழுழைப்பு மட்டத்தில் உள்ளோரும் வேலை பெற்றுக் கொள்ள இடம்—பெயர்தலை யாரும் தவருக எண்ண முடியாது. அத்தோடு எமது வருவாய் வழிகள் என்பதில் வெளிநாட்டு வருவாய்கள் என்பதுதான் உண்மையில் நடைமுறைக் கணக்கு மீதியை சமப்படுத்தி எமது வள வருவாய் இடைவெளியை சரி செய்ததாகும். வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய கட்டாயமாக ஒரு வருமானத்துறை நிதியீட்டம் பெறும் நிர்ப்பந்தந்தான் எமது வெளியேற்றத்தை தூண்டியுள்ளது. இதனை யாரும் எமது பொருளாதார முடக்கம் என்று கூருது ஒரு பொருளாதார அடிப்படை என நோக்குதல் அவசியம். இதனுல் தான் இன்று வடக்கு-கிழக்கில் வாழ்க்கை என்பதே இயங்கும் நிலையில் வைத்திருக்கும் முக்கிய நிதியீட்ட வழியாகும்.

அடுத்து அரசியல் ரீதியில் இன்று ஏற்பட்டுவரும் புலப் பெயர்வு வரவேற்கத் தக்க ஒன்றேயாகும். போட்டிக் குழுக்கள் மோதும் துர்ப்பாக்கிய நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் உயிர் உத்தரவாதத்தை அரசியலில் சம்பந்தப் பட்டவர்கள் பெறவும், இது பலருக்கு உதவியளித்துள்ளது—என்பதுடன் அமைதியின்மை என்பது ஏற்பட்டுள்ள நிலையில் அப்பாவிப் பொது மக்கள் விலகிச் செல்வது என்பது தவிர்க்க முடியாததாகும். உண்மையில் அமைதியின்மையை தவிர்ப்பதற்கு ஆவன செய்வதுதான் சரியே தவிர குடிப் பெயர்வு பிழையென கோசமெழுப்புவது இயலாமை என்பதனையே குறிக்கும். அத்தோடு எமது ஆட்களின் அசைவு என்பது உண்மையில் குடிப் பெயர்வாகக் கருதாமல் வெளியேற்றமாகவே நோக்கப்படவேண்டும்.

ஆளப்படும் பிரிவினராகிய நாம் அந்த ஆளும் பெரும்பான்மையினர் ஆட்சியாளர்களினுல் திட்டமிடப்பட்ட வகையில் அரசியல் பொருளாதார ரீதியில் ஒடுக்கப்படும் நிலையைத் தவிர்த்து சுயமாக வாழ இந்த வெளிநாட்டு நிதியீட்டம் முக்கிய பங்கைக் கொடுக்கும். இந்தவகையில் நமக்கே சம்பந்தப்படாத விடயங்களுக்காக நாம் பழிவாங்கப்படுவதனை முறியடிக்கவும் முடியும். (உ+ம்) மின்தடையும் அதனுல் பொருளாதார விளைவும்.

அடுத்து இந்த வெளியேற்றம் என்பதில் இளைஞர் யுவதிகளின் வெளியேற்றமே பெரிதும் காணப்படுகின்றது. அதிலும் ஓரளவு கல்வித் தேவையை நிறைவு செய்தவர்களை உள்ளடக்குவதுடன் கிராமப் புறம் சார்ந்த பிரிவினரும் கணிசமானதாக அமைகின்றது. இந்நோக்கில் இவர்கள் புதிய தொழில் நுட்ப கருவிகளையும், பொறிகளையும் காணும், இயக்கும் வாய்ப்பை பெறுவதோடு நவீன விஞ்ஞான உத்திகளினை அனுபவ ரீதியாகவும் பெற முடிவதால் இவர்கள் நாட்டின் கால ஓட்டத்தில் திரும்ப வரும்போது உள்நாட்டில் அந்தக் கருவிகளுக்கு இணையானதாக தொழில் நுட்பத்தை கடைப் பிடிக்கலாம். இதனுல் அவர்களின் அறிவு பெருகுகின்றது என்பது மறுக்க முடியாது. புறநடையாக சில முக்கியமான பணிகளில் உள்ளவர்களின் வெளியேற்றம் என்பது மூளைசாலிகளின் வெளியேற்றமாக கருதப்படினும் இவர்கள்

### அ. கேதீஸ்வரன்

இந்த நிலையில் இருந்தும் விட்டுச் செல்வது அவர்களின் சுயநல நடவடிக்கையாகவே கருத முடியும். இதனைத் தடுக்க முழு வெளியேற்றத்தையும் கண்டிப்பது மூடத்தனமானதே. தேசப் பற்றும் பொறுப்பும் உள்ளவர்களாகவே மூளைசாலிகள் இருக்க முடியும் என்பது முக்கியமான தொன்ருகும்.

அடுத்து இந்த வெளியேற்றமானது வெளிநாட்டு கலை கலாச்சாரங்களினுல் மாற்றமடைந்து உள்நாட்டு கலாச்சாரத்தை பாதிக்கிறது என சிலர் கருதுவது யதார்த்த நோக்கில் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். மனிதன் சூழலுக்கு ஏற்ப மாற்றமடைந்து செல்வதன் மூலமே வாழ்வு என்பது உத்தரவாதப் படுத்தப்படும். அந்தவகையில் இவ்வெளியேற்றப் பிரிவினர் அந்த நாடுகளின் கலாச்சாரத்தை இங்கே கொண்டு வந்து எமது கலாச்சாரத்தை சீரழித்து விடுவார்கள் என எண்ண முடியாது. எமது கலாச்சாரம் என ஒரு தனிவட்டத்துக்குள் நின்றுவிடாது பல கலாச்சாரங்களை அறியவும் எமது சிறப்புக்களை உணரவும் இது ஓர் நல்ல சந்தர்ப்பமாகும். உ+மாக இன்று ஜேர்மனியில் எமது உள்நாட்டிலில்லாதளவிற்கு தமிழ் சஞ்சிகைகளும் கலாச்சார விழாக்களும் நடப்பது கவனிக்கத் தக்கது. வெளிநாட்டில் இருப்பவரை விட உள்நாட்டில் வாழ்பவரே வெளிநாட்டு மோகம் கொண்டு காணப்படுகின்றனர். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்றும் ஏற்புடையது என்பது எமது கலாச்சாரமாகும்.

இந்த நோக்கில் நல்ல பல அம்சங்கள் வெளிநாட்டு அனுபவங்கள் மூலம் பெறப்படுவது கவனிக்கத்தக்கது.


அடுத்து, வெளிநாடுகளுக்கு செல்வதன்மூலம் ஆரோக்கியம் பேணப்படாது விடலாம் என்ற எண்ணக்கரு உண்மையில் வியக்கத்தக்கது. அந்த நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாத அளவு போதை வஸ்துகள் நமது பகுதியில் கிடைக்கின்றன. நமது நாடும் இன்று இந்த போதைப் பொருள் கடத்தலில் முக்கிய மையமாகும். இதனை இங்கு குறைந்த விலையில் பெறமுடிவதுடன் பெறுவதும் இலகு. ஆனுல் வெளி நாடுகளில் விலை உயர்வு, கிடைப்பனவின் அருமை என்பன உண்மையில் இந்த வகை பொருள் பாவனையில் இருந்து எமது இளைஞர்களை விடுவிக்கிறது.

அத்தோடு வெளிநாடுகளிலும் பெருமளவு இளைஞர்கள் அகதிகளாகவும் குறைந்த சம்பளங்களிலும் வேலை செய்யும் நிர்ப்பந்தம் அவர்களை தேவையற்ற ஆடம்பரச் செலவினங்களை தடுப்பதன் மூலம் வெளிநாடுகளில் இருந்து பரவி வரும் எயிட்ஸ் போன்ற நோய்கள் இவர்களை வந்தடைவது குறைவானதாகும். அத்தோடு மத்திய கிழக்கு நாடுகளில் பெருமளவு இளைஞர் வேலை செய்யும் நிலைமைகள் இதற்கு பல கட்டுப்பாடுகளை விதிப்பதனுல் நோய் காவிகளாக இவர்களை நாம் கருதுவது தவருனதாகும். ஒப்பீட்டு நோக்கில் வெளிநாடு சென்றவர்கள் மூலம் ஏற்படும் நோயினுல் ஏற்பட்ட இழப்புகளை விட உள்நாட்டில் உள்ள நோய்கள் அதிக இழப்பினையே ஏற்படுத்துகின்றன. இதனுல் முதலில் இந்த நோய்களை தவிர்ப்பதும் அதற்கு ஆவன செய்வதும் தான் புத்திசாலித்தனமானது.

அகதிகளாக இடம் பெயர்தல்களும் வேலைதேடிச் சென்றவர்கள் என்ற வகையில் தான் அண்மைக்காலங்களில் எமது பகுதியில் இடம் பெயர்வு ஏற்பட்டுள்ளதனுல் உண்மையில் இவர்கள் அனைவரும் நாட்டுக்கு திரும்பி வரக் கூடியவர்களாக இருப்பதனுல் இவர்கள் பெற்ற தொழில் நுட்ப அறிவினை நாம் எமது நாட்டில் பயன்படுத்த சந்தர்ப்பம் உண்டு. இதற்காக எமது பொருளாதாரத்தை தயார்படுத்தல் தான் அவசியம். அதனை விட வருங்கால சந்ததியினர் வளரும் நவீன விஞ்ஞானத்தை பாவிக்கும் முறை கூட தெரியாது நிற்பதனை விட ஓரளவு பயிற்சியினை பெறுவதும் சில கருவிகளையாவது உருவாக்கி கொள்வது இந்த வெளியேற்றம் தரும் அறிவியல், நன்மையானது.

பொதுவாக வடக்கு கிழக்கில் அண்மையில் ஏற்பட்டு வரும் ஆள் வெளியேற்றம் என்பது ஒப்பீட்டு நோக்கில் உள்நாட்டு பொருளாதார நலன் சார்ந்த நன்மைகளை வழங்குவதுடன் அறிவியல் ரீதியாக நவீன நடைமுறைகளை நோக்கி நம்மை நகர்த்தி செல்கிறது என்பதும், மறுக்கவோ மறைக்கவோ முடியாததாகும். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார இழப்புகளை எல்லாம் ஈடு செய்து நாட்டின் இயங்கு நிலையை வழமை பாதையில் வழி நடாத்திச் செல்வது வெளிநாட்டு பண அனுப்பீடுகள் தான் என்பது கவனிக்கத்தக்கதோடு புள்ளி விபர அடிப்படையில் தகவல்கள் கிடையாத நிலையில் ஓர் ஆய்வு இத்துறையில் இடம் பெறின் அது உண்மை நிலையை உலகிற்கே உணர்த்தி நிற்கும் என்பது மறுக்க முடியாது. □

## சிந்தனை மேடை — 2
## புலம் பெயரும் ஈழத் தமிழர்



# சர்வாதிகாரம், சுதந்திரம், ஆத்மீகம்.

ஆத்மீகமும் சர்வாதிகாரமும் ஒன்றையொன்று தொட்டுக்கொள்ள முடியாத இரு துருவங்கள். ஆயினும் இரண்டையும் ஒப்பிட்டு நோக்குவது சுவையானது.

சர்வாதிகாரத்தின்கீழ் மக்கள் சர்வ அதிகாரங்களையும் ஓர் மனிதனின் கையில் குவித்துவிட்டு விரும்பியோ விரும்பாமலோ அவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த வாழ்க்கை.

ஆத்மீகவாதிகளோ சர்வ அதிகாரங்களையும் இறைவனிடமோ, தான் குரு என வரித்துக் கொண்டவரிடமோ ஒப்படைத்துவிட்டு அவரின் கட்டளையின் கீழ் இயக்கம்.

சர்வாதிகார உலகு, ஒருமனிதனின் கையில் சுழலும் சிறைக் கூடம்.

ஆத்மீக உலகு, ஒரு ஞானியின் (அல்லது கடவுளின்) திரிகால அறிவில் அவிழ்ந்தோடும் விடுதலை.

சர்வாதிகாரி கடவுளை நம்பாதவன். நம்பினுலும் அதன் உள்விளக்கங்களை உணராததால் தன்னையே சகலவற்றுள்ளும் திணிக்கும் தன்முனைப்பின் உச்சம்.

### திசைசண்டியன்

ஆத்மீக உலகின் குருவோ, கடவுள் என்னும் பேரறிவுக்குத் தன்னை அர்ப்பணித்து பொது நன்மைக்காக இயங்கும் தன் இழப்பின் உச்சம்.

அதனுல் குருவிடம் இச்சை இல்லை, முனைப்பு இல்லை, குருவிடம் இருப்பதாகத் தெரிவதெல்லாம் பக்குவமுருத சாதகனின் எஞ்சி நிற்கும் முனைப்பின் இச்சையின் எச்சங்களே என்பதை சாதகன் பின்னர் அறிகிருன்.

குரு இச்சையற்றவராதலால் அவரின் கீழ் இயங்கும் சாதகர்கள் (ஆத்மீகர்) குருவின் நிலையை அடைய, தம் இச்சைகளைக் களையவேண்டிய நிலை.

சர்வாதிகாரியோ இச்சை உடையவனுதலால், அவன் இச்சைகளை நிறைவேற்ற அவனது மக்கள் தம் இச்சைகளை ஒறுக்கவேண்டிய நிலை

முன்னது விடுதலைத் தேவையின் சந்தோஷத்தில் நடைபெறுவது.

பின்னது அதிகாரக் கட்டளையின் திணிப்பில் நடைபெறுவது.

முன்னதில் ஆனந்தம், விடுதலை பெறும் வெளிச்சம்.

பின்னதில் துக்கிப்பு. விடுதலையற்ற இருள்.

முன்னவர்கள் கிருஷ்ணனைச் சேவித்து நின்ற ஆயர்பாடியர்.

பின்னவர்கள் இராவணனை இறைஞ்சி நின்ற அரக்கர் குழாம்.

# WEL COME TO CANADA

1986 இல் கப்பலில் அகதிகளாய் சனடாவுக்கு வந்த தமிழர்களின் கதையைத் தழுவி இப்படம் உருவாக்கப்பட்டது. கனடிய தேசியத் திரைப்படச் சபை (National Film Board of Canada ) தயாரித்த இதனை, கனடாவின் புகழ்பெற்ற இயக்குனரான ஜோண் சிமித் இயக்கியுள்ளார்.

மொன்றியோலிலும், ரொறென்ரோவிலும் இவ்வருடம் நடைபெற்ற திரைப்பட விழாவில் பலரதும் பாராட்டைப் இப்படம் பெற்றது.

கனடாவில் வரும், தமிழ் வெளியீடொன்றில் வந்துள்ள 'ஜோண் சிமித்' தின் பேட்டியினையே, இங்கு தருகிறோம். இதை செல்வம் என்ற வாசகர் கனடாவிலிருந்து அனுப்பிவைத்துள்ளார்.

□ இப்படிப்பட்ட ஒரு படத்தையெடுக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

O அரசியல் அகதிகளின் துன்பமயமான வாழ்க்கையை மையமாக வைத்து ஒரு படம் எடுக்க வேண்டும் என்பது எனது பலநாளைய ஆசை. எனது பெற்றோர்கள் கூட இந்த நாட்டிற்கு இமிகிரேட் பண்ணி வந்தவர்கள்தான். எனவே ஒரு நாட்டிற்கு புதிதாக வரும்போது ஏற்படும் துன்பங்கள் எனக்கு நன்கு அறிமுகமானவை. அத்துடன் எனது பல்கலைக்கழக நாட்களிலிருந்தே அரசியல் பிரச்சினைகளில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தேன். இவையெல்லாம் சேர்ந்தே இப்படிப்பட்ட ஒரு படத்தை எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டிவிட்டது.

□ அதற்கு இலங்கைத் தமிழர்களை தேர்ந்தெடுத்திருக்கிறீர்களே! ஏன்?

O தனிப்பட்ட காரணமெதுவுமில்லை. தமிழ் அகதிகள் கப்பலொன்றின் உதவியுடன் கனடா வந்து சேர்ந்தது என் மனதைத் தொட்டது. எனவே இதையே எனது அடுத்த படத்திற்கான கருவாக்கத் தீர்மானித்தேன். பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கனடா நாஷனல் பிலிம் போர்ட் உதவியுடன் சுமார் அரை மில்லியன் டொலர் செலவில் தயாரித்து முடித்துள்ளேன்.

O படத்தில் வரும் சில காட்சிகள் இலங்கை, இந்திய, கனேடிய அரசுகள் ஏதாவது ஒன்றினல் சில வேளைகளில் ஆட்சேபிக்கக்கூடும் என நீங்கள் எதிர்பார்க்கவில்லையா?

O உண்மைதான். இது இந்திய எதிர்ப்புப்படமாக வர்ணிக்கப்படும் அபாயம் அமைந்துவிடும் சாத்தியக் கூறுகள் இருப்பதாக படத்தின் விநியோகஸ்தர்களில் ஒருவரும் என்னிடம் குறிப்பிட்டிருந்தார். அதை உளமார ஏற்கும் நிலையில் நானில்லை. அக்காட்சிகள் யதார்த்த நிலை ஒன்றை வெளிக்கொணர ஏற்படுத்தப்பட்டவை. இதன் மூலம் எந்தவிதமான பக்க சார்பையும் நான் எடுக்கவில்லை – எடுக்கவும் விரும்பவில்லை. இலங்கையின் தற்போதைய அரசியல்நிலை எப்படி எனக்குத் தெரிகிறதோ அதையப்படியே கனேடியர்களுக்குத் தெரிவிக்கவே நான் விரும்புகிறேன். இது என் கடமை. இலங்கையிலும். இந்தியாவிலும் திரையிடப்படுவதற்காக மொழி மாற்றம் செய்யும்பொழுது இவ்வசனங்களைப் பொதுவான வசனங்களாக்கி திரையிடப் பார்க்கலாம். கனடாவில் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே தான் திரையிடப்படும்.

□ இதன்மூலம் கனேடிய பொதுசன அபிப்பிராயத்தில் ஏதாவது மாற்றம் ஏற்படலாமென நினைக்கிறீர்களா?

O நிச்சயமாக! அகதிகளுக்கு எதிரான நிலைப்பாடுகளும், நிறவெறியும் இங்கு பலமாக இருக்கிறது. இவை மாற்றப்பட வேண்டும். வசதியான வாழ்க்கையை மட்டும் கோரி அகதிகள் கனடா வந்துவிடுவதில்லை. சொந்த நாட்டின் அவலங்களும் சேர்ந்துதான் அவர்களை இக்கரைவரை கொணர்ந்து விடுகிறது. இவ்வகை அவலங்கள் வெளிக்கொணரப்படுவதன் மூலம் அகதிகள்பால் மேலும் அனுதாபம் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டே!

□ இந்தப் புதுமையான படத்தை யாழ்ப்பாணத்தில் திரையிட முயற்சிப்பீர்களா?

## கலைச்சாரல்

O இந்தப்படம் சிறீலங்காவில் நிச்சயமாகக் காண்பிக்கப்படும். அதற்கான சகல முயற்சிகளையும் கனடா நாஷனல் பிலிம் போர்ட் எடுத்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் இதைத் திரையிட சில வேளைகளில் அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் நான் சும்மாயிருக்கப்போவதில்லை. யார்மூலமாயினும் சரி இதை அங்கு திரையிட வைத்தே திருவேன். இதற்காக இலங்கையின் சட்ட விதிகளை மீறவேண்டி வந்தாலும் கூட கவலையில்லை. அண்டர்கிரவுண்டாக போயாவது இப்படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட வைப்பேன். இதோ பாருங்கள்! யாருடைய பிரச்சினைகளை மையமாக வைத்து இப்படத்தையெடுத்தோமோ அவர்களாலேயே இப்படத்தைப் பார்க்க முடியாமல் போகவிடுவதில் அர்த்தமேயில்லை. அதை செய்துமுடிக்க எந்தச் சட்டவிதிகளையும் மீறிவிடுவதிலும் தப்பேயில்லை.



ஜோண் சிமித்

□ நன்றி ஜோண், உங்கள் முயற்சி வெற்றியளிக்க வாழ்த்துக்கள்.

O உங்களுக்கும் எனது நன்றி மூர்த்தி. □

# அரங்கக் கலை:

## சில அனுபவங்கள்

நாடகம் தயாரிப்பதென்பது இங்கு பெரும்பாலும் விழாக்கள், போட்டிகள், நிதி சேகரிப்புக்கான காட்சிகள் போன்ற தேவைகளின் பொருட்டே இடம் பெறுகிறது. எனவே, இச் சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டே நாடக எழுத்துருக்கள் தெரிவு செய்யப்படும்.

முதல் நாள் ஒத்திகையில் பரஸ்பர அறிமுகமும்; நாடக விடயம் பற்றியும் மேலோட்டமாகக் கலந்துரையாடிக் கொள்வோம். நாடகத்தில் பங்குபற்றுபவர்களை எம்முடன் பழக்கப்படுத்திக் கொள்ளவும் அவர்களது குணவியல்புகளை அறிந்து கொள்ளவும் இது உதவுகிறது. பின்பு இடம் பெறவுள்ள பாத்திரத் தெரிவுக்கு இந்நடைமுறை மிகுந்த உதவியாயிருக்கும்.

அடுத்த கட்டமாக, தயாரிப்பிற்கு எடுத்துக்கொண்ட நாடகம் பற்றி விரிவாகவும்; ஆழமாகவும் கலந்துரையாடத் தொடங்குவோம். இதன் போது நாடகத்தூடு சொல்ல வருகின்ற விடயம் பற்றியும், அவ்விடயம் சொல்லப்படும் முறைமை பற்றியும் பங்கு பற்றுபவர்கள் தெளிவு பெற்றுக் கொள்வார்கள்.

இவ்வேளைகளில் உடற்பயிற்சிகளும், அசைவுகளும், இலேசான ஆட்டங்களும் பங்கு பற்றுபவர்களுக்குப் பயிற்றப்படும்.

நாடகம் பற்றிய தெளிவை மனதில் ஏற்படுத்தவும்; உடலை மனம் வேண்டும் நிலைக்குப் பிரயோகப்படுத்தவும் இச் செயல் முறைகள் உதவுகின்றன. இவற்றில் நாம் வெற்றி கண்டால் மிகுதித்தயாரிப்பு இலகுவாக அமையுமென்பது அனுபவ உண்மை.

முதன் முதலாக எழுத்துருவை நெறியாளரே தேவையான விளக்கங்களுடன் பூரணமாக வாசிப்பார். பின்பு நாடகத்தில் பங்குபெற வந்திருப்போருக்கு எழுந்தமானமாக வாசிக்கக் கொடுக்கப்படும். அவர்கள் வாசிக்கும் போது அவர்களுடைய குரல், முகபாவம் என்பன கவனிக்கப்படும். இவற்றுடன் பௌதிகத்தோற்றம், நடத்தல், ஓடுதல் போன்ற அசைவுகளும் கவனிக்கப்படும்.

இச் செயல்முறைகளின் தொடர்ச்சியில் பாத்திரத் தெரிவு இடம்பெறும். இத்தெரிவில் தவறேற்படுமாயின், எதிர்பார்த்தவற்றைச் செம்மையாக நிகழ்த்த முடியாத சிரமத்திற்காளாவோம்.

நாடகத் தயாரிப்பிற்குத் தேவையான நபர்களிலும் குறைவானேரே கிடைப்பாராகில், எமது பணி கடினமானதாகும். பாத்திரத் தெரிவின் போது மிகவும் சங்கடப்பட வைக்கும் நிகழ்வு இது.

பாடசாலைகளில் சங்கடங்கள் வேறொரு வழியிலும் வந்து சந்திக்கும். "இவன் கெட்டிக்காரன்," "இவன் நல்லாய் நடிப்பான்", "இந்தப் பிள்ளை தாய்க்கு நல்லாய் நடிக்கும்" போன்ற ஆசிரியர்களின் அறிவுறுத்தல்கள் எம்மை மிகவும் தொல்லைப் படுத்துவதுண்டு.

நாடகத்தில் பங்கு பெறும் அனைவரும் நாடகத்தை முழுமையாக அறிந்திருப்பது அவசியம். தமக்குரிய உரையா

**சி. ஜெயசங்கர்**

டல்களை மட்டும் பாடமாக்கி வைத்திருப்பது போதுமானது என்ற தப்பபிப்பிராயம் இன்றும் பரக்கக் காணப்படுவது கவலைக்குரியதாகும்.

### 2

நாடகப் போட்டிகளுக்கு நாடகம் தயாரிப்பதென்பது, 'கொல்லக் கொண்டு போவது போல்' என்ருல் மிகையாகாது.

போட்டி விதிகளென்ற பெயரில் முதலாவது இடர்ப்பாடு எதிர் கொள்ளும். இவை காலத்திற்கு ஒவ்வாததாகவும் நாடக வளர்ச்சியைக் கருத்திற் கொள்ளாததாகவும் அமைந்திருப்பதைப் பரவலாகக் காணலாம். குடும்பக் கதையாகத்தான் இருக்க வேண்டும். சிறந்த நடிகன், சிறந்த நடிகை, சிறந்த துணை நடிகன், சிறந்த துணை நடிகை என்போருக்கும் பரிசுகள் வழங்கப்பட இருப்பதால் இதற்குத் தக நாடக எழுத்துருக்கள் அமைய வேண்டுமென்பது போன்ற விதிமுறைகள், ஆக்கக் கலைஞர்களை அநாவசியமாகக் கட்டுப்படுத்துகின்றன. மேலும் நாடகப்போட்டிகள் வருடா வருடம் நடக்குமொன்று; ஏதோ நடந்து முடியட்டும் இல்லாவிடில் "பெடி பெட்டையள் கத்தும்" என்பதற்காக நடைபெறுவதையும் காண முடிகிறது.

நாடக எழுத்துருவைத் தணிக்கை செய்வோர் தமது மேதாவிலாசத்தைக் காட்டிக் கொள்ளும் இடமாக நாடக எழுத்துருவைக் கருதிக் கொள்வர். தணிக்கையாளருக்குரிய தகுதியென்பது நாடகம் பற்றித் தெரிந்திருக்க வேண்டுமென்பதல்ல; பாடசாலையிலோ அல்லது வெளியிடத்திலோ அவர் வகிக்கும் பதவி அதைத் தீர்மானிக்கும்.

நாம் தயாரித்த நாடகமொன்றில் வரும், "கண்டறியாத வாத்தி உத்தியோகம் பார்த்து மாதம் 1500 ரூபா பிச்சைக்காசு எடுக்கிருர்" என்ற வசனத்தில் வரும் 'வாத்தி' என்ற பதம், ஆசிரியர் குழாமை அவமதிப்பதாகவும் எனவே அதற்குப் பதிலாக 'ஆசிரியர்' என்ற பதமே பாவிக்கப்படவேண்டும். என்றும் தணிக்கையாளர் முடிவு செய்தனர். அவர்களது உத்தரவை அப்படியே தருகிறேன். "Delete வாத்தி Substitute ஆசிரியர்"

யதார்த்தமென்ன? நாடகத்தில் வாத்திப் பாத்திரம் அவமதிக்கத்தக்க வகையிலா படைக்கப்பட்டிருக்கிறது என்பதை, அவர்கள் புரிந்து கொள்ளவேயில்லை.

எமது நாடகங்களில் வரும் வசனங்கள் "சரியான Jarringகப்பா" என்பது சிலரது அபிப்பிராயமாக இருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறோம். எமது நாடகமொன்றில் வரும் "வீட்டை ஓட்டா விசரா" என்ற வசனத்தைக் கூட சகிக்கமாட்டாத ஒருவர், நெறியாள்கை செய்த நண்பரிடம் "First you must learn stage etiqutte" என்று கூறியுள்ளார்.

இனித்தான் சுவாரஸ்யமான கட்டத்துக்கே வருகிறோம். 'மாணவரிடையே பிரிவினையை ஏற்படுத்த வேண்டுமா, நாடகப்போட்டி வை!' என அடித்துக் கூறவைக்கும் நிகழ்வுகள், போட்டிகளுக்கு நாடகம் தயாரிக்கும் பொழுதும் மேடையேற்றும் பொழுதும் இடம்பெறும்.

ஒரே வீட்டில் இருப்போர் வெவ்வேறு நாடகங்களில் பங்குபெறின் அவர்களது நிலை தர்ம சங்கடமாய்ப் போய்

(11ஆம் பக்கம் பார்க்க)

## அடையாளங்கள்

அறிமுக அட்டைகள தானு
அடையாளம் காட்டுகின்றன;
சவமணிந்த சட்டைகளுந்தான்
அடையாளம் காட்டுகின்றன.

அடையாளம் தெரியாமல்
முகங்கள் கருக்கப்பட்ட
பிணங்களிலும்,
மனித நேயமற்ருேர்
மறைக்க முயன்ற,
மா நிசங்களின்
அடையாளங்கள் தெரிகின்றன.

- நெடுந்தீவு மகேஷ் □

## வெட்க இரவுகள்

கொட்டை பறித்து
கோதுழுத்தும் வெளவால்களால்,
வாழ்விழந்து மண்சேரும்
வேம்புப் பழங்களின் ஓலம்;
'‚டக் — டக்'' கென்று கூரை பிளக்க......

சபைதேடி அலேகின்ற
யாரே ஒரு சங்கீதக்காரனுக்காக,
இரவிரவாக(ச்) சுதிசேர்த்து சுகம்கெடுக்கும்
நுளம்புகளின் இரைச்சல்;
''நொய்'' யென்று காதைக் கடிக்க...

எங்கோகேட்ட ''பட் பட்''டுக்காய்
ஓசைப்படாமல் ஊர்ந்துவரும்
சப்பாத்து மனிதங்களுக்கு ''சலாம்'' சொல்லும்
நாய்களின் நாவுரைப்பு;
''வள்'' ளென்று வான் பறக்க......

யன்னலுக்குள் தலேவிரித்த
பக்கத்துத் தென்னேயிலே
ஏறிநின்று சலசலப்பது பூனேயோ யாரோவென்று
பார்க்கக் கூட துணிச்சலற்ற
பயந்தாங்கொள்ளி எனக்காக.

இடைக்காலத் தகராற்ருல்
தாய்வீடு சென்ற என்
மின்சார சம்சாரத்துக்காய்
நான் செய்து கொண்ட இந்த
''சின்னவீட்டு'' செட்டப் மட்டும்,
எத்தனே உண்மையாய்
என்முன்னேயே உருகி உருகி
வெண்முத்தாய் வீழ்கிருள்.

இடையிடையே கேட்குமந்த
''வீர்...வீர்...'' விசிலடிப்பால்
அழைக்கப்படும் யாரோவுக்கும்,
அவளுக்குமாக நான் அசைகின்றேன்.

..............சனியன்
பதுங்கிக் கிடந்த எலியொன்று
பாய்ந்து எழ,
படுத்திருந்த பானே அதில்
தடக்கி விழ,
பாதிஉயிர் உடல் மீற
மீதியோடு ''கவர்'' எடுத்து,
பின் மெதுவாக எழுகின்றேன்.

நிறைவுதர நீளமாய் பெருமூச்சு;
எதுவுமே இல்லேயென்று
யன்னலுக்குள் நிலவு நின்று
சமாதானம் சொன்னபோது,
பெரிதாக வெட்கம்.

இதுவும் ஒரு வெட்க இரவு;
எத்தனே காலமாய் மீண்டும் மீண்டும்.

இவை எங்கள் இரவுகளின்
நீண்டகால உறவுகள்;
இந்த இரவுகளும் எங்களின்
நீண்டகால உறவுகள்.
இத்தனே துணிச்சலாய் வருமிந்த
வெட்க இரவுகள்;
இவை மட்டும் இப்போதைக்கு
விடிவதாக இல்லே !

- யதார்த்தன் □

# ஈழத்தமிழ் வழக்காற்றில் புது முயற்சி



விமர்சனம்

மக்கள் வாழ்வில் பழமொழி
சச்சி மாஸ்ரர்
பக். 127 + XXIV
விலே ரூபா 25.00

எமது கலாசாரத்தின் பாரம்பரிய விழுமியங்களில் பலவற்றை நாம் உதாசீனம் செய்துவிடுகிருேம். தமது இழந்துபோன இறைமையை மீட்டெடுக்கப் போராடும் ஒரு இனம் அதற்கு உயிர்த்துடிப்பு ஏற்றும் வகையில் தம்மால் மறந்து அல்லது புறக் கணிக்கப்பட்ட கலேவடிவங்களே நாட்டார் வழக்குகளே, வரலாறுகளே, மீட்டளிக்கின்ற முயற்சியாளர்களேக் கொண்டிருக்க வேண்டும். பல்வேறு துறைகளிலும் அந்த உயிரோட்டம் நிகழ கருத்தூன்றி உழைப்பவர் ஒரு இனத்தின். ஆத்மத் துடிப்பின் பங்காளர்கள் ஆவார். அந்த வகையில் எமது பழமொழி வழக்குகளே ஆய்ந்தறிந்து கட்டுரைத் தொகுப்பாக 'மக்கள் வாழ்வில் பழமொழி' என்ற பெயரில் வெளியிட்டுள்ளார் சச்சி மாஸ்டர். அவரது பங்களிப்பை முதலில் பாராட்டுவோம்.

எளிவந்த அழகிய தமிழ் நடை: தெளிவான விளக்கங்கள்; கலாசார ஒன்றிணேவு; சமூக உணர்வு இவை கொண்ட இந்தத் தொகுப்பு நூல் சமூக அக்கறையும், சமூகத் தொடர்பும் மிக்க ஒருவரால்தான் ஆக்கப்படக்கூடியது. ஆசிரியஞய். வைத்தியஞய், தொழிற் சங்கவாதியாய், அரசியல் ஈடுபாடு கொண்டவராய் பல்துறைத் தொடர்பும் அதனுல் பலரோடும் ஆத்மார்த்தமாகத் தொய்ந்து பழகும் பண்பும் உடையவராய்பலமுகங்கொண்டிருக்கும் இவரது ஆளுமை, இந்தப் பழமொழித் தொகுப்புக் கட்டுரைகளேத் தெளிந்த பார்வையில் எழுத இடமளித்திருக்க வேண்டும். இருபத்தொரு அத்தியாயங்களாகப் பகுத்துத் தொகுக்கப் பெற்ற இந்த நூலின் தொகுப்பு முறையில், தேர்ந்த இழை ஓட்டம் இருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. சமயகலாசாரத்தில் ஈடுபாடு கொண்டிருப்பவர் என்பதை, முதலாவது அத்தியாயத்தின் தொடக்கத்திலும் இறுதி அத்தியாயத்திலும் அழுத்தமாக வெளிப்படுத்தி இருக்கிருர். ஆனுல் வெற்று ஆசார மரபை உதாசீனம் செய்து உள்முகமான ஆன்மீக மரபின் அகம்— புறம் தழுவிய வெளிப்பாடாக அது அமைந்திருப்பதே, அவரது சீரான கலாசார நோக்கை புலப்படுத்தி நிற்கிறது.

நூலின் ஆரம்ப அத்தியாயமே சொல் ஒன்று செயல் ஒன்ருக நடிப்பு வாழ்க்கை நடாத்தும் ஆசாடபூதித்தனத்தைக் காட்டித், தொடங்குகிறது. ''படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில்'' தான் சொல்வதற்கு எதிர்மாருன செய்கையும் அதையாரும் உள்ளே இடித்துரைத்தால் 'உனக்கல்லடி பெண்ணே ஊருக்கடி கண்ணே' என அதற்குச் சமாளிப்பு செய்வது, உள்ளுளுத்துப்போன இந்த இரட்டை வாழ்க்கை முறை இன்று சமய ஆசாடபூசித்தனம், அரசியல் ஆசாடபூசித்தனம், இலக்கிய ஆசாடபூசித்தனம், எனப் பலமுகங்கொண்டு விரிந்து செல்வதை நாம் காண்கிருேம். இந்த இரட்டை வாழ்க்கை முறை எங்கே கொண்டு போய் விடும் என்பதை இப் பழமொழித் தொகுப்பின் இறுதி அத்தியாயத்தில் காணலாம். ''தீ வினே செய்தால் பேய்வினேசெய்யும்'' என்னும் அதிகாரத்தில் வரும் அத்தனேயும் பொருள் நிறைந்த உண்மையான ஆத்ம கலாசாரம் எது என்பதை உணர்த்தி நிற்கும் வாசகங்கள் ''வீட்டிலே வினே இருக்கிறது. வினேதீர்க்க கோவிலுக்குப் போனல்

□ சு.வில்வரத்தினம் □

தீருமா?'' என்ற பழமொழியைக்கூறிய பின் கீழ்வருமாறு எழுதுகிருர் ஆசிரியர்: ''வினே ஆன்மாவைப் பீடித்துக் கொள்ளுகின்றது. பிறப்பு நிகழ்வு நடந்து கொண்டேயிருக்கிறது. ஆன்ம விடுதலேக்கு மார்க்மில்லே.'' ''எவன் ஒருவன் அன்பு வழி நின்று போட்டி, பொருமையின்றி, சத்திய வழி நடந்து பிறவுயிர்களுக்காக திரிகரணசுத்தியுடன் சேவை செய்து வாழ்வானேயானுல் அதில் இருந்தே ஆண்டவனேக் காண்பான். ஆண்டவன் உருவற்றவன். அருள் நிறைந்த இதயத்தில் உறைபவன். அன்பே வடிவானவன். அவனது படைப்புகளுக்கு பணி செய்வதால் அவனேக் காணலாம்.''

தெளிவான பிரயோகம் எது எனத் தெரியாமல் இருந்த சில பழமொழிகளின் பிரயோகம் இவைதான் என சில பழமொழிகளின் திருந்திய வடிவங்களே ஆசிரியர் தந்துள்ளார். உதாரணமாக 'பந்திக்கு முந்து படைக்குப் பிந்து' என்ற பழமொழியின் உண்மையான வழக்கு 'பந்திக்குமுந்து படைக்கப் பிந்து' என்பதே என ஆதார விளக்கங்களுடன் நிறுவுகிருர். பந்தியோடேயே சம்பந்தப்பட்டதாகவே அதன் தொடர் அடியும் என்பது இதில் தெளிவாகிறது. ஆனுல் பழமொழிகள் ஒரு சமூகக் கலாசாரங்களின் அடையாளமாக இருப்பது என்ற வகையில், இத்தகைய பழமொழிகள் எமது கலாசாரத்தின் கீழான தன்மையைச் சுட்டி நிற்பதற்காக நாம் வருந்த வேண்டியிருக்கின்றது. சபையில் பரிமாறுவதை மற்றையோர் உண்டு களிக்க உதவுவதைவிடவும் பந்தியில் முன்னணி வகிப்பதை நாகரிகத்தின் எந்தப்பந்தியில் வைப்பது? இந்த இடத்தில் வள்ளுவன் சொன்ன ''நயத்தக்க நாகரிகம்'' தவிர்க்க இயலாதவாறு நினேவில் எழுகிறது. இன்னும் ஒரு பழமொழி சம்பந்தமாக ஆசிரியரின் கருத்துடன் ஒன்ற முடியாதிருப்பதையும் இங்கு தரவேண்டும். ''ஆயிரம் பேரைக் கண்டவன் அரை வைத்தியன்'' என்ற திருந்திய வடிவத்தைத்தந்துள்ளார். ''ஆயிரம் பேரைக் கொன்றவன்'' ''ஆயிரம் வேரைக் கொன்றவன்'' ''ஆயிரம் வேரைக் கண்டவன்'' இப்படிப்பல வழக்குகளில் மேலே சொன்னதே சரி என்ற அவர் கூற்று, சரியல்ல என்பதே எனது அபிப்பிராயம். சித்த மருத்துவத்தின் சிறப்பே அதன் மூலிகைப் பயன்பாட்டில்தான் தங்கியுள்ளது. மூலிகை ஆய்வும், அவற்றைப் பயன்படுத்தும் முறையும், மூலிகைகளின் வேர்களேக் கண்டறிந்து ஆய்வு செய்தல் ஒரு சித்த வைத்தியத்தின் அரைவாசி என்ருல், நோய் நாடியறிந்து அதைப் பயன்படுத்தும் முறை மிகுதி அரைவாசி எனலாம். இதிலே ''ஆயிரம் வேரைக்கண்டவன்'' என்ற அமைவே சரியாயிருக்க வேண்டும், 'ஆயிரம் பேரைக் கண்டவன்' என்பது வைத்தியனுக்கு மட்டும்தான் பொருந்தவேண்டும் என்றில்லே. தொழிற் சங்க வாழ்விலும், ஆசிரியத் தொழிலும், வேறு சமூக சேவைகளிலும் ஆயிரம் பேரை ஆசிரியர் காணுமலா இருந்திருப்பார்? 'நோயாளிகள்' என்ற சிறப்புச் சுட்டில்லாமல் வருவதால் வேர் என்பதே பேர் என மருவி வந்தது எனக் கொள்வதே இங்கு பொருந்தும். எனினும் மேற்படி பழமொழிகளுககு திருந்திய பிரயோக வழக்கைக் காண ஆசிரியர் முயன்றிருப்பது பல பண்டிதர் வித்துவான்களின் 'கெடுபிடி' விளக்கங்கள் போல அல்ல என்பதையும் இங்கு சுட்ட வேண்டும். ''களவும் கற்று மற'' என்ற பழமொழிக்கு களவும் கவறும்(சூதும்) அற'' என்றும், ''சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்'' என்ற பழமொழிக்கு''சஷ்டியில்(சஷ்டி விரதத்தில்) இருந்தால் அகப் - பையில் (கர்ப்பப்பையில் கரு வளரும்) வரும்'' என்ற பாணியிலான கெடுபிடி 'விளக்கம்' பல்லுடைக்கும் பாஷையில் தரும் பண்டிதர்களும் உள்ளார்கள். இவர்களெல்லாம் தமிழையும் கலாசாரத்தையும் நவீனகாலத்துக்குக் கொண்டு வரமாட்டார்கள் என்பதற்கு இதைவிட உதாரணம் வேறு வேண்டியதே இல்லே.

இந்த நூலின் இறுதியிலே ஆசிரியர் மேற்கொண்டும் கட்டுரைகளே எழுத பழமொழிகளேத் திரட்டி வைத்திருப்போரை அனுப்பி உதவுமாறும், விசேடமாகப் பிரதேசப் பழமொழிகளே விசேடமாக விரும்பத்தக்கவை என்றும், கோரிக்கை விடுத்திருக்கிருர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

**திசை** சிறுகதைப் போட்டி ஆறுதல்பரிசுக்கதை —5—

**கா**வில் குத்திய முள்ளின் பகுதியொன்று சதைக்குள் மாட்டிக்கொண்டு உபத்திரவத்தைத் தருவதுபோல, இதயத்தின் ஒரு பகுதியில் 'விண்விண்' ணென்று கொண்டிருக்கிறது வேதனை. அநுதாபத்தால் ஏற்பட்டவேதனை. 'தம்பையா வாத்தியாருக்கா இப்படியொரு நிலை ஏற்பட வேண்டும்?'

# முகத்திரை

சில்லென்றது தேகம் முழுவதும். குத்திட்டெழுந்த முடிக்கால்கள் இந்திரனின் புல்லரிப்பை பகிரங்கப்படுத்தின. அன்னை பூமியில் படிகின்றபோது ஊனம்புரியாத குறுகுறுப்பு பாதங்களில். பத்து வருடங்களின் பின்பு முதன் முறையாக இப்போதுதான் நுழைகிறான் பெற்றெடுத்த ஊருக்குள். இருக்காதா பின்னே சில்லிப்பு?

முன்பின் அறியாத கிராமத்தினுள் நுழையும் புதிய மனிதன் ஒருவனது மனோநிலையில் சூழலின் விஷயங்களை உன்னிப்பாய் உள்வாங்கிக் கொண்டே நடக்கிறான். பிரதிபலிப்பு, ஊர் பாரிய மாற்றங்களைக் கண்டிருப்பதாய், 'யாழ்ப்பாண மண்ணின் பாரம்பரியங்களோடு இணைந்த பனை

**எஸ். பி. சிவனேஷ்**

மரங்கள் வெகுவாக அருகி விட்டன. ஆங்காங்கே ஒற்றைப் பனைகள் மட்டும் தெருவோரங்களில். பாரம்பரியத்தின் கடைசி ஞாபகார்த்தச் சின்னங்களோ என்னவோ! தோப்பாக இருந்த பனைகள் எல்லாம், அவை நின்று கொண்டிருந்த காணிகளிற்குள் கட்டப்பட்டுள்ள வீடுகளின் கூரைகளில் ஓடுகளை முதுகில் சுமந்து கொண்டிருந்தன ………

…… விதம் விதமான; புதிய அமைப்பிலான வீடுகள். சனங்களின் ரசனையிலும் தான் எவ்வளவு மாற்றம்? வெளிநாட்டு வேலைவாய்ப்பின் பாதிப்பு நன்றாகவே புலப்படுகிறது. டி.வி. அன்டனாக்கள் இல்லாத வீடுகள் மிகக்குறைவு. ஆனாலும் முன்னைய பரபரப்பு இல்லை.' அரசியல் சூழ்நிலையால் ஏற்பட்ட விளைவு என்பது அவனுக்குத் தெரிகிறது. அந்த எண்ண ஓட்டத்தை உந்தி ஒதுக்கி விட்டு, நடுத்தரவர்க்கம் பெரும்பான்மையாக வாழும் இந்தக் கிராமத்துள், வெளிநாட்டு பணவரவு தந்த செழிப்பினைக் காணும் வியப்பில் லயிக்கிறான்.

சடுதியாய்க் குதித்து அவன் செவிப்பறைகளில் மோதுகிற குரல். ''டேய்! இந்திரன். வா! வா!''

எதிரே அவனது பால்ய நண்பன். ஒன்றாகப் படித்தவன். இந்த மண்ணில் அவனுடன் கூட துள்ளியாடித் திரிந்தவன்.

''டேய் ரகுபதி! ஆளே நல்லா மாறிட்டாயடாப்பா.''

''நீயும் தான் ……''

பரஸ்பரம் குசலம் விசாரிப்பு.

ஜீவனோபாயம் பற்றிய விவரணைகள்.

ஊரில் உள்ள நெருக்கமானவர்களைப்பற்றிய விசாரிப்பும் வந்தது. நடுவில் தம்பையா வாத்தியாரைப் பற்றிச் சொன்னான் ரகுபதி. ''பாவம் வாத்தியார்! இப்ப நல்லாய்க் கஷ்டப்படுகிறார். எவ்வளவு பிரயாசையாய் பிள்ளைகளை உருப்படியாக்கி விட்டவர்? இப்ப அதுகள் தன்ரை குடும்பம், தன்ரை பிள்ளைகள் எண்டு தான் இருக்குதுகளே தவிர இவரைத் திரும்பியும் பார்க்கிறதில்லை. பென்சாதியும் ஒன்றரை இரண்டு வருஷமாப் படுத்த படுக்கை. வாற பென்ஷன் முழுக்க மனுசியின்ரை வைத்தியச் செலவுக்குப் பத்தாது…''

மேலும் நிறையச் சொன்னான். அவற்றைக் கேட்டதிலிருந்து தான் இதயத்தின் ஒரு பகுதியில் 'விண்விண்' ணென்று கொண்டிருக்கிறது வேதனை.

தமிழில் சீரிய முறையில் எழுத, படிக்க, சிந்திக்க இன்று முடிகின்றதென்றால், இந்திரனுக்கு வழிகாட்டி இந்தத் தம்பையா வாத்தியார். அவனது கல்விக் குழந்தை நடக்க எத்தனித்து விழுந்த போதெல்லாம் கரங்களைப்பற்றி ஒழுங்காக நடக்கப் பயிற்றுவித்தவர்.

தொழில் மீதான ஈடுபாடு, மாணவர்மேல் அக்கறை, ஆதரவான பேச்சு எல்லாமே பெருமதிப்பிற்குரிய ஸ்தானம் ஒன்றை அவருக்கு ஏற்படுத்தியிருந்தன. மாணவர் எண்ணங்களில் இந்திரன் மீதோ தனியான அபிப்பிராயமே அவருக்கு இருந்தது.

சாந்தமான சுபாவம், பணிவு, ஒழுக்கம், கற்பதில் உள்ள லட்சியம் எல்லாவற்றிலும் அவரது ஈடுபாட்டை ஈர்த்திருந்தான். தன்மேல். போகப்போக குரு சிஷ்யன் உறவு நெருக்கமாகிவிட்டது. தேவைப்படுகிற போதெல்லாம் அவருக்கு வேண்டிய உதவிகளைச் சலிக்காமல் செய்கிற அளவு நெருக்கம். அவனது கல்வியிலே தனிப்பட்ட அக்கறையை அவரும் எடுத்துக் கொள்கிற அளவிற்கும்.

அதோ! சற்றுத் தொலைவில், தம்பையா வாத்தியார் வந்துகொண்டிருக்கிறார் மிதிவண்டியில்.

அவரை வெளிக்கோட்டு உருவாய் மட்டுமே கவனித்தானாயினும், சரியாக அடையாளம் கண்டு கொள்ளவில்லை. 'யாரோ வருகிறார்கள்' என்னும் பதிவே இந்திரனின் எண்ணத்தில் விழுகிறது.

அவரிடமும் கூட அதே எண்ணப்பதிவு தான். கண்களை இடுக்கிக் கொண்டு தொலைவில் வந்து கொண்டிருக்கும் உருவத்தை உற்றுப் பார்க்கிறார். காலம் வயோதிபத்தைக் கொடுத்துவிட்டு பார்வைச் சக்தியில் கொஞ்சத்தை பண்டமாற்றுச் செய்து கொண்டு விட்டது. உருவம் மங்கலாய்த் தான் தெரிகிறது. 'யாரோ பயணகாரர் வருகினம் போலும்' என்பதான பதிவு.

இரண்டு உருவங்களும் நெருங்குகின்றன. இப்போது தான் அடையாளம் புரிந்து கொள்கிறான் இந்திரன்.

''என்ன ஸேர், சுகமாயிருக்கிறியளா?''

தம்பையா வாத்தியார்ப் சட்டென்று மிதிவண்டியிலிருந்து குதிக்கிறார். நிலை தளம்புகிறது. ஆனாலும் விழுந்துவிடாத பக்குவம் இருக்கிறது.

நன்றாகவே உருமாறிப் போய் விட்டார். நெற்றியிலே விபூதிப் பட்டையும் அதன் மேல் முழு நிலவென சந்தனப் பொட்டும் வைத்து; நிமிர்ந்த நடையும்; நேர் கொண்ட பார்வையும்; உதடுகளின் மத்தியிலே இழையாய் புன்சிரிப்புமென நடந்து வருகிறபோது, அவரைப் பார்க்கிற மனித உள்ளங்களில் ஒரு மரியாதை உணர்வு ஏற்படுமே! 'அந்தத் தம்பையா வாத்தியார் எங்கே? அவரது கம்பீரம் எங்கே?' ஏங்குகிறது உள்ளம். எப்போதும் நிரந்தரமாய்க் குடிகொண்டிருந்த மகிழ்ச்சியைத் துரத்திவிட்டு, லேசான சோகம் தானட மட்டும் குடியேறிவிட்டது கண்களில். அவற்றைக் குழிவு விழ வேறு செய்துவிட்டது. முகத்திலும் உடலிலும் தோலைத் துருத்திக்கொண்டு நிற்கும் எலும்புகள், எங்கும் தோலில் சுருக்கங்களும் விழுந்துவிட்டன, துருப்பிடித்து பொருக்குகள் கிளம்பி நிற்கும் அவரது மிதிவண்டியைப் போல……

…… அலங்கரிப்பு என்ற பெயரிலே அனாவசியமானவற்றையெல்லாம் அள்ளிப் பொருத்தாமல், 'முக்கியமான உதிரிகளுடன் கூடிய; அழகான; செலுத்துவதற்கும் சுலபமான மிதிவண்டி அப்போது அவர் வைத்திருந்தது, இப்போதும் அதே வண்டி தான். ஆனால், இரண்டு சக்கரங்களும், ஒரு நடுச்சட்டமும், ஒரு கைப்பிடிச் சட்டமுமாக மட்டுமே துருப்பிடித்து; பொருக்குகள் கிளம்பி; மீந்து கிடக்கிறது.

அவனது முகத்தை நோக்கி நெருங்குவதுபோல, தனது முகத்தை முன்னே நீட்டி உற்றுப் பார்த்துவிட்டு தம்பையா வாத்தியார் சொல்கிறார்: 'ஆளை விளங்கேல்லை!''

''நான் தான் ஸேர் இந்திரன். பண்டத்தரிப்பு மணியத்தின்ரை மகன்.''

''அடடே இந்திரனா? பார்த்து எவ்வளவு காலமாகுது. அதுதான் மட்டுப்பிடிக்க முடியேல்லை. இப்பத்தான் பயணத்தாலை வருகிறீர் போலை?''

''ஓம் ஸேர். நீங்கள் எப்பிடி இருக்கிறியள்?''

''பரவாயில்லை!''

பரவாயில்லை என்ற வார்த்தையை நன்றாக விரித்து, தனது வாழ்நிலை யதார்த்தங்களைப் போட்டு மூட்டைகட்டி ஒழித்துக் கொள்கிறார். தன்டம் படித்த மாணவனிடம் தனது சுயகௌரவத்தை விட்டுக் கொடுப்பதா?

பரஸ்பரம் விசாரிப்புகள், விளக்கங்கள். ஒருவர்மேல் ஒருவர் பிரியமுள்ள இருவர் மிகப் பெரிய கால இடைவெளிக்குப்பின்' சந்திக்கிறார்கள்.




அந்த இடைவெளியைடைத்து விட முயலுபவர்கள் போல் நீண்ட நேரம் பேசுகிறார்கள்.

தம்பையா வாத்தியாரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்ற ஆவல் கிளர்ந்து விட்டது இந்திரனிடம். ஆனால் அதனை எந்த வழியில் செய்வது என்பதில் தான் குழப்பம். 'உங்களுக்கு ஏதாவது உதவி தேவையா? என்று கேட்டு விடலாமா? ச்சே! அதுமரியாதைக் குறைவு. எதுவுமே கேட்காமல் ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து விடலாமே! ஆனால் அதற்கும் குறையேதாவது விளங்கினால்! வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வந்து விட்டோம் என்கிற கர்வத்தில் தான் அதனைச் செய்ய முனைந்ததாக தப்பாக எடை போட்டு விட்டால்!'

எப்படியும் அவருக்கு ஏதாவது வகையில் உதவி செய்ய வேண்டுமென்று மனம் அலை மோதுகிறது. அப்படி இப்படி என்று பல கோணத்திலும் பார்த்தால் முடியாமலிருக்கிறது. ஒரு வேளை அவரே வாய்விட்டுக் கேட்பாரா? என்று கூட எண்ணினான். 'கேட்கலாம். இவ்வளவு இடர்ப்பாடுகளின் மத்தியில் இருப்பவர்; சிறு வயதிலிருந்தே என் மீது அதீத நம்பிக்கையுள்ளவர், அவரே கேட்கட்டும்.' கேட்பார் என்பது அவனது நம்பிக்கை. அவரது வேண்டுதலுக்கு வசதியாக அவருடனை பேச்சை நீட்டி வளர்த்துக் கொண்டே போகிறான்.

முகத்திலோ திரை. தம்பையா வாத்தியாரால் எப்படி அவனது முகத்தைப் பார்க்க முடியும்?

அவனுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே அவரது சுயகௌரவ உணர்வு மெல்லத் தளர்ந்து கொண்டே போகிறது. தனது கஷ்ட நிலைகளை அவனிடம் சொல்வோமா? என மனம் அலைபாய ஆரம்பிக்கிறது. ஏதாவது உதவி கேட்டுப் பார்க்கலாமா? என அபிப்பிராயப்படுகிறார். 'கூடாது! அறிவு கெட்ட தனம். ஒரு ஆசிரியன் தன் மாணவனிடம் போய் பொருளாதார உதவி கேட்பதாவது! என்மேல் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறான் அவன். அத்தனையும் ஒரு நொடியில் தகர்ந்து விடாதா?' தளர்ந்து கொண்டிருந்த சுயகௌரவ உணர்வை சட்டென்று இறுக்கிப் பிடித்துக் கொள்கிறார்.

கேட்கக் கூடாது என உறுதி கொள்கிறார். ஆனாலும் அதனைப் பலவீனப்படுத்தி விட்டு ஏக்கம் தலை தூக்குகிறது. அவனாகவே முன்வந்து உதவி செய்ய மாட்டானா என்கிற ஏக்கம். 'செய்வான்! என்மேல் இவ்வளவு பக்தி உள்ளவன், எனது கஷ்ட நிலை தெரிந்தால், தானாகவே ஏதாவது உதவி செய்யட்டுமா என்று கேட்பான்'. கேட்பான் என்பது அவரது நம்பிக்கை. அவனது கேட்டலுக்கு வசதியாக, அவனுக்கேற்றாகவே அவரும் பேச்சை வளர்க்கிறார். ஒவ்வொரு விஷயங்களுக்கிடையிலும், தனது விஷயத்தைப் பட்டும் படாமலும் போட்டுக் கொள்கிறார்.

'பட்டும் படாமலும்' என்பது ஓர் இலக்கணமில்லாத மொழி என்று சிந்திப்பதே இல்லை இந்த நடுத்தர வர்க்க மனிதர்கள். அது பல்வேறு நிலைகளிலும் பல்வேறு அர்த்தங்களைக் கொடுப்பது என்ற உண்மையைக் கண்டு கொள்ள முடியாத குருட்டுத் தனம். ஒருவர் ஒரு அர்த்தத்தில் பேச, கேட்பவர் வேறு அர்த்தத்தில் புரிந்து கொள்ளும் குழப்ப

(11ஆம் பக்கம் பார்க்க)

## சார்ஜாவில்

# பாகிஸ்தானுக்கு வெற்றி

**விளையாட்டுக் களம்**

**ஜி. எஸ். சவரிமுத்து**

மத்தியகிழக்கிலே உள்ள சார்ஜாவில் நடைபெற்ற சாம்பியன் கோப்பைக்கான கிரிக்கட் போட்டிகளில் பாகிஸ்தான் வெற்றியீட்டியுள்ளது. பாகிஸ்தானின் தலைவரான இம்ரான்கானும், வேகப்பந்து வீச்சாளர் வசீம் அக்ரமும் இந்த வெற்றிகளுக்கு வழி கோலினுர்கள். இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகள் பங்கு கொண்ட இந்தப் போட்டித் தொடரிலே நடைபெற்ற ஆறு பந்தயங்களில் பாகிஸ்தான்; தான் பங்கு கொண்ட அனைத்துப் போட்டிக்ளிலும் வெற்றிக் கனியைத் தட்டிச் சென்றது. மேற்கிந்திய அணியே போட்டிகளில் வெற்றி பெறும் எனப்பலரும் எதிர்பார்த்திருந்த போதிலும், 4 ஆவது போட்டியின் பின்னர் 'விவியன் ரிச்சாட்ஸ்' இற்கு ஏற்பட்ட காயம், அவ்வணியை வெற்றிக்கு இட்டுச் செல்லத்தவறி விட்டது. 'ஒரு அணியின் தலைமைத்துவத்திலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது' என்பது, ரிச்சாட்ஸ் இன் காயம் காரணமாக அவ்வணிக்கு ஏற்பட்ட தோல்வியில் இருந்தும் தெளிவாகிறது. 'தலைமைத்துவம்' எனும் தேரிலே வெள்ளோட்டம் சென்ற சிறீகாந்த் தனது பணியைச் சிறப்பாகச் செய்த போதிலும், அணியின்மற்றைய உறுப்பினர்கள் துணைபோகாததனுலேயோ என்னவோ, வெற்றி கிட்டவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற முதல் போட்டியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுடனை சர்வதேச போட்டிகளில் 6 ஆவது தொடர் வெற்றியைப் பெற்றது. விவியனின் அபார ஆட்டமும், சிறீகாந்தின் தலைமைத்துவமும் இப்போட்டியில் அவதானிக்கத்தக்க விடயங்களாக இருந்தன. முதலில் ஆடிய இந்தியா குறைந்த ஓட்டங்களைப் பெறுவதற்கு (169) விவியன் எடுத்த 2 முக்கிய விக்கட்டுகளும், வோஷ் கைப்பற்றிய 4 விக்கட்டுகளும் முக்கிய காரணமாக இருந்தன. பந்துத்தடுப்பிலும் விவியன் இரு அபார காட்சுகளைப் பிடித்தார். தொடர்ந்தாடிய மேற்கிந்திய அணி 173 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்திலும் விவியன், பந்துகளை விழாசித்தள்ளி 34 பந்துகளில் 34 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தின் நாயகனுகத் தெரியப்பட்டார். சிறீகாந்த் பல வழிகளிலும் வியூகங்களை அமைத்து வெற்றியைத் தன தாக்க முயற்சித்த போதிலும், அணியின் வீரர்கள் பலரும் காட்சுகளைக் கோட்டை விட்டனர். விளைவு? இந்தியாவுக்கு ஏற்பட்ட தோல்வி.

அடுத்த ஆட்டத்தில் மேற்கிந்திய அணியுடன் ஆடிய பாகிஸ்தான் அணி, வசீம் அக்ரத்தின் அபார ஆட்டத்தினுல் வெற்றியீட்டியது. முதலில் ஆடிய பாகிஸ்தான் 8 விக்கட்டுகளை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. சலீம் யூசுவ் 75 ஓட்டங்களைப் பெற்ருர். தொடர்ந்தாடிய மேற்கிந்திய அணி ஒரு கட்டத்தில் 34 ஓவர்களில் 4 விக்கட் இழப்புக்கு 158 ஓட்டங்களைப் பெற்று, சௌகரியமாக இருந்தபோதிலும்; அக்ரம் வீசிய அடுத்தடுத்த 3 பந்துகள் 3 மேற்கிந்திய விக்கட்டுகளைச் சாய்த்தன. மேற்கிந்திய அணி 11 ஓட்டங்களால் தோல்வி கண்டது. அக்ரம் ஆட்டத்தின் நாயகனுனர்.

3 ஆவது ஆட்டத்திலே இந்தியாவுடன் ஆடிய பாகிஸ்தான் 6 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது. 50 ஓவர்களில் இந்திய அணி 4 விக்கட் இழப்புக்கு 273 ஓட்டங்களைப் பெற்றபோது, பலரும் இந்திய அணியே வெற்றி பெறும் என எதிர்பார்த்த போதிலும், இம்ரானின் தலைமைத்துவத்தில் இருந்து உதித்த எண்ணம், பாகிஸ்தானை வெற்றிக்கு இட்டுச் சென்றது. முதல் விக்கட்டுக்கு சாகிப்பும் ஷொகெப்பும் 102 ஓட்டங்களைப் பெற்றதும் 1 விக்கட் விழுந்தது. பின்னர் எவரும் எதிர்பாராதவகையில், களத்தில் நுழைந்த அக்ரம் அனுயாசமாக 4 சிக்சர்களை விழாசித்தள்ளி ஓட்டவிதத்தை உயர்த்தி, சிறீகாந்த்தையும் இந்தியாவையும் திணறடிக்கச் செய்தார். பாகிஸ்தான் வெற்றியீட்டிய பொழுதிலும் இந்தியாவின் துருப்புச் சீட்டாட்டக்காரர் சித்து 108 ஓட்டங்களைப் பெற்றதை, இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்? இவரே ஆட்டத்தின் நாயகனுகவும் தெரியப்பட்டார்.

இரண்டாவது தடவையாக இந்தியாவுடன் மோதிய மேற்கிந்திய அணி தோல்வியையே சந்தித்தது. முதலில் ஆடிய இந்தியர்கள் 211 ஓட்டங்களை பெற்றனர். கபில், சிறீகாந்த் ஆகியோர் முறையே 41, 40 ஓட்டங்களைப் பெற்றனர். மேற்கிந்திய அணியின் வெற்றியையே பலரும் எதிர்பார்த்த போதிலும், அவ்வணியின் தலைவரும் மின்னல்வீரருமாகிய 'விவியனு'க்கு ஏற்பட்ட சுகயீனத்தால், அவ்வணி தோல்வியைத்தழுவியது. 174 ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்திய அணி கபில்தேவும், மனேஜ் பிரபாகரும் கைப்பற்றிய இவ்விரண்டு விக்கட்டுகளால் நிலையிழந்தது.

5 ஆவது போட்டியில் மேற்கிந்திய அணியுடன் மோதிய பாகிஸ்தான் அணி, அதிலும் வெற்றி பெற்றது. 4 விக்கட்டுகளை இழந்து 86 ஓட்டங்களை பெற்றிருந்த பாகிஸ்தான் அணி இம்ரான், இஜாஸ் அகமட் ஆகியோர் பெற்ற அரை செஞ்சரிகளால் 237 ஓட்டங்களைப் பெற்றது. 51 பந்துகளில் இஜாஸ் பெற்ற 50 ஓட்டங்கள் ஆட்டத்தை விறுவிறுப்பாக்கியது. மேற்கிந்திய வீரர்களான விவியனும், லோகியும் ஆட்டத்தில் பங்கு கொள்ளவில்லை. மேற்கிந்திய அணி 44.4 ஓவர்களில் 180 ஓட்டங்களைப் பெற, வெற்றிக் கனியை பாகிஸ்தான் பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் எல்லாப் போட்டிகளிலுமே வெற்றிபெற்றதனுல், வெற்றிக் கிண்ணத்தை வழங்க ஆருவது ஆட்டத்திற்கு அவசியம் இருக்கவில்லை. 6 ஆவது ஆட்டத்தில் இந்தியாவுடன், பாகிஸ்தானுக்கு வெற்றியோ தோல்வியோ, 'வெற்றிக் கிண்ணம்' பாகிஸ்தானுக்குத்தான் என்ற நிலை ஏற்பட்டது. பாகிஸ்தானுக்குக் கிடைத்த வெற்றி உண்மையிலேயே பொருத்தமான தொன்ருகும்.

விவியனுக்கு ஏற்பட்ட காயத்தினுல் மேற்கிந்திய அணி சிறப்பாக ஆடமுடியாமல் போனமையும், இம்ரானின் சிறந்த தலைமைத்துவத்தினுல் பாகிஸ்தான் வெற்றி பெற்றமையும், கிரிக்கட்டில் தலைமைத்துவம் எத்துணை முக்கியமானது என்பதைக் காட்டுகின்றது.

நேரு கோப்பைக்கான போட்டிகளில் என்ன நிகழும் என்பதைப், பொறுத்திருந்து பார்ப்போம். □

# இளவட்டம்

### மௌனம்

வானம் இன்று இருள்கட்டிக் கிடக்கிறது
இந்த மனித மனங்களின் மௌனத்தைப் போல,
மழையையும் காணவில்லை வெயிலையும் காணவில்லை.

காலை தேநீர் குடிக்கும் போது
எனது நாய் என் காலை
ஆசையுடன் நக்கித் தந்தது.

மாலை, கடையோரம் சிறு குழந்தையொன்று
தெரியாத என்னைப் பார்த்து
கன்னங்குழியச் சிரித்தது.

எனக்குப் பிடிக்காத
என்வீட்டுப் பூனை
தலையைத் தூக்கிப் பார்த்து விட்டு
பஞ்சியோடு படுத்து விட்டது.

இடையிடையே
நான் காணும் மனிதர்கள் மட்டும்
ஒன்றுடனும் ஒட்டாமல்
எதையோ மறைப்பதாய்
இறுக்கமாய் இருக்கிருர்கள்.

ஆக,
செல்லப் பிராணியும்
சிறு குழந்தையும்
இயற்கையும் மட்டுமே
இலேசாக.

நான்
மறுபடியும் காலை எழுகிறேன்
வானம் வெளுத்துக் கிடந்தது
நாய் வாஞ்சையுடன் ஓடிவந்தது
பூனை பஞ்சியோடு படுத்துவிட்டது
மனிதன் மட்டும்
மௌனமாய்.

— கமலினி □

### தளிர்

போலி இரவும் வாழ்வும்
மண்ணுப் போகட்டும்.
நிலைத்த உணர்வுகள்
சுவடு பதித்த நினைவுகளில்
எம்மினிய வாழ்வும் கனவும்
அர்த்தமுள்ளதாய் அமையட்டும்.

கடந்த நிகழ்வுகளின்
நிதர்சனத்தை- நீ
சுமந்து செல்க.
உன் பிஞ்சுக்கால் உரம் பெறும்.
புதிய குரல் உயர்ந்து ஒலிக்கும்.

உன்னை நம்புகிறேன்.
நீ
மனிதம் வெளிக்க
மனிதனுனவன்.

— K. பாபு □

### பூக்களை மட்டுமல்ல...

மெல்ல...மெல்ல...
பரந்து வீசிய
சுதந்திரக் காற்றை
உள் வாங்கி
பூத்துக் குலுங்க
முயன்ற
புரட்சிப் பூக்களில்
மொய்த்த
சுயநல வண்டுகளுடன்
சூருவளியாக மாறிய
அந்நியத் தென்றலும்
பறித்தது
பூக்களை மட்டுமல்ல,
மொட்டுக்களையும் தான்.

— திருநாவு. விஜயஹரன் □

### கவிதைக் கன்னி

பாவலர் நாவில்,
பதுங்கியிருந்த, பா!
எதுகை மோனையின்றி,
எளிய நடையில்,
யாப்பு இலக்கணம்,
யாவற்றையும் துறந்து,
புதுமெருகு பெற்று,
புதுக் கவிதையென,
கல்லூரி மாணவர் நாவிலும்,
கன்னியர் இளைஞர் நாவிலும்,
கலை பெற்று நிற்கிருள்!

— மீசாலையூர் கமலா □

### ஒற்றுமையை உணர்த்திடுவோம்

கா...கா... என நாங்கள்
கரைந்து செல்கையிலே
சீ...சீ சனியனென
சினங்கொண்டு
பேசுவோரைப்
பார்த்தியளோ!
இவர்களையோ?
பகுத்தறிவாளரென்று
பாரிலுள்ள
உயிர்களெல்லாம்
பண்புடன் போற்றுவது!

ஆளுக்காள் போட்டி
அதிலும் மிகவேகம்
நாளுக்கு நாள் சண்டை
இவ் நவீன உலகினிலே...
கொள்ளை
கற்பழிப்பு
கொடூரப் படுகொலைகள்
செய்து தம்மினத்தைச்
சீரழியச் செய்பவரே
சீய்... சீ... என எம்மைச்
சினங்கொண்டு பேசுகின்ருர்.

பாவம்!
இவர்களெம்
பக்குவத்தை உணராது
பேசுவதால்
அவர்கள் வாசலுக்கு
நாம் சென்று
வாஞ்சையுடன் புகட்டும்
ஒற்றுமைச் செயல்முறையை
ஒருநாளும் நிறுத்தோம்.

— ஏ. என். பாஸ்கரன் □

# இன்றைய உலக அரசியலின் மையம் கிழக்கு ஐரோப்பா

## உருளும் உலகில்

சரண்யன்

சர்வதேச அரசியல் தற்பொழுது கிழக்கைரோப்பாவில் மையம் கொண்டுள்ளது. வளைகுடாவில் மையம் கொண்டிருந்த சர்வதேச அரசியல் கடந்த இரண்டு ஆண்டுகளுள் கிழக்கு ஐரோப்பாவை நோக்கி நகர்ந்து விட்டது. அது வளைகுடாவில் மையம் கொண்டிருந்த தன்மையிலிருந்து கிழக்கு ஐரோப்பாவில்மையம் கொண்டுள்ள தன்மை முற்றிலும் வேறுபாடானது.

காலத்திற்கு காலம் உலக அரசியல் ஏதோ ஒரு முக்கிய பிரச்சினையை நோக்கி, ஒரு பிராந்தியத்தை நோக்கி திரும்புவது வழக்கம். அவ்வாறான மையங்கள் பகைமைத் தன்மை கொண்டனவாகவும், இரு முகாமைக் கொண்ட போக்கு மிக்கனவாக இருப்பதுமே வழக்கம். கடந்த 40 ஆண்டுகட்கு குறையாத வரலாற்றுப் போக்கு இவ்வாறே இருந்தது. ஆனால் தற்போது கிழக்கைரோப்பாவில் ஏற்பட்டுள்ள மையத் தன்மை வித்தியாசமானது.

நான் மேலே குறிப்பிட்ட இரு முகாம்களில் ஒரு முகாமாக இருப்பது கிழக்கு ஐரோப்பா என்பது வெளிப்படை. இந்த முகாம், ஏனைய உலக அரசியல் மையங்களில் தானும் மறுமுகாமுக்கு எதிராக இயங்கும் ஒரு முகாமாக பங்கு வகித்து வந்தது. ஆனால் ஒரு முகாமாக ஒரு பக்கப் பங்கெடுத்து வந்த கிழக்கு ஐரோப்பா இப்பொழுது தன்னை ஒரு மையமாகவும் கருப்பொருளாகவும் கூடவே மாற்றி விட்டது. ஆகவே உலக அரசியலில் இதன் பாதிப்பை முகாம் என்ற வட்டத்திலிருந்தும் மையம், கருப்பொருள் என்ற நிலையிலிருந்தும் பார்க்க வேண்டும்.

இங்கு ஏற்படும் மாற்றங்கள் மனிதகுல வளர்ச்சிக்கு நலமானதா, அல்லது நலமற்றதா என்ற கருத்து இக்கட்டுரையில் எடுத்து நோக்கப்படமாட்டாது. மாறாக இதுஇன்று உலக அரசியலையே உலுக்கும் மையமாக மாறிவிட்டது என்ற கருத்தை மட்டும் நோக்குவோம்.

கிழக்கு ஐரோப்பாவின் இம் மையத் தன்மையானது இரு முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒன்று அது தன்னகத்தே அரசியல் பொருளாதார மாற்றங்களைச் செய்யத் தொடங்கியுள்ளது. கிழக்கு ஐரோப்பாவினுள் ஏற்படும் இம்மாற்றத்தினை வசதி கருதி, அப்பிராந்தியத்தை மனதிற் கொண்டு,''அகஅரசியல்'' மாற்றம் என அழைப்போம். இரண்டாவது உலகம் முழுவதற்குமான ஒரு புதிய அரசியற் கொள்கையை இப்பிராந்தியம் பிற்போது முன்வைக்கிறது. இக்கொள்கையானது உலகின் முழு அரசியல் போக்கிலும் பெரும் தாக்கத்தினையும் மாற்றங்களையும் ஏற்படுத்துகிறது. வசதி கருதி இதனை "புற அரசியல்" மாற்றம் என அழைப்போம். (இங்கு அகப் பிராந்தியம், புறப்பிராந்தியம் என்ற அர்த்தத்திற்தான் அக, புற அரசியல் என்ற பதம் பிரயோகம் பெறுகின்றதே தவிர, இதுவரை கொள்ளப் பட்ட அதற்குரிய அடிப்படை அர்த்தத்திலல்ல.)

''அக அரசியல்,'' ''புற அரசியல்'' ஆகிய இரண்டினையும் ஒரே நேரத்தில் பெரும் மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ள முதலாவது சர்வதேச அரசியல் மையம் இதுவே. இத்தகைய மாற்றத்தினதும் மையத்தினதும் நடுநாயகனாக நிற்பவர் கொர்பச்சேவ் ஆவார். ஆதலினால் இன்று உலகின் எத்தகைய தலைவர்களுக்கும் இல்லாத முதன்மையை கொர்பச்சேவ் வகிக்கிறார். கடந்த இரண்டு ஆண்டுகளில் கொர்பச்சேவின் பெயரும் கருத்தும் உலகின் வெகுஜன தொடர்புச் சாதனங்களில் அடிபட்டதற்கு நிகராக எந்தவொரு தலைவரது பெயரும் அடிபடவில்லை.

முதலில் இவரால் மேற்கொள்ளப் பட்ட பிராந்தியத்தின் ''அக அரசியல்'' மாற்றத்தினை சற்று நோக்குவோம். அங்கு இதுவரை காலமும் இருந்துவந்த ஒரு கட்சி ஆட்சி முறை சிறப்புடையதல்ல எனவும், அங்கு பல கட்சிகள் தோன்றுவதற்குரிய வாய்ப்புக்கள் வேண்டுமென்றும் அதற்கேற்ற அரசியல் மாற்றங்களை இவர் செய்து வருகிறார். இந்த வகையில் போலந்தில் கம்யூனிஸ்ட் கட்சி அல்லாத கட்சி தேர்தலில் பெரும்பான்மை வெற்றியைப் பெற்றது. இத்தகைய மாற்றம் ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முழுவதற்கும் பரவுகின்றது. கொம்யூனிஸ்ட் கட்சியும் இந்நாடுகளில் தன்னை புதுப்பித்து புதிய நிர்மாணங்களைச் செய்யத் தொடங்கியுள்ளது.

இத்தகைய மாற்றமானது, கிழக்கு ஐரோப்பா அல்லாத உலகிலுள்ள ஏனையமார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆட்சி நிகழும் நாடுகளிலும், அவ்வாறு ஒருகட்சி ஆட்சி முறை என்ற மார்க்ஸிஸக் கோட்பாட்டினையும் சோதனைக்கும் பரிசீலனைக்கும் தள்ளியுள்ளது. சீனா இதனை நிராகரித்துள்ளது, கியூபாவும் அவ்வாறே நிராகரித்துள்ளது. எனவே இம்மாற்றமானது கிழக்கு ஐரோப்பாவில் மட்டும் ஏற்படும் மாற்றம் மட்டுமன்றி, அந்த கிழக்கு ஐரோப்பாவே மார்க்ஸிய ஆட்சி முறையின் தொட்டிலாக இருந்தமையால் உலக ரீதியில் மார்க்ஸிஸக் கோட்பாட்டினதும் பரிசோதனைக்கும் மாற்றத்திற்கும் உரிய தளமாகவும் மாறியுள்ளது. இவ்வாறு அக அரசியல் மாற்றங்கள் பல.

அடுத்து "புற அரசியல்" மாற்றத்தினை நோக்குவோம். இருந்து வந்த உலக அரசியல் கொள்கையை மாற்றி புதிய கொள்கையை கிழக்கு ஐரோப்பா முன்வைத்துள்ளது. இது ஒரு முகாம் என்ற வகையில் மற்ற முகாம் இதற்கு ஏற்ப மாறவேண்டி நிர்ப்பந்திக்கப்படுகின்றது. உலக அரசியல் பிரதானமாக இரு முகாம்களின் அரசியல் என்ற வகையில் இத்தகைய மாற்றமானது உலக அரசியல் முழுவதையுமே பாதிக்கும் தன்மை உள்ளதாக அமைந்துள்ளது.

அரசியற் கோட்பாடு, ஆயுத உற்பத்தி, இராணுவக் கொள்கை, அண்டவெளி ஆய்வு, அரசியற் கூட்டு, அணி அமைப்பு, பொருளாதாரக் கொள்கை ஆகிய இன்னோரன்ன அம்சங்களில் எல்லாம் தாக்கத்தினையும் மாற்றத்தினையும் விளைவிக்கும் மையமாக கிழக்கு ஐரோப்பா இன்று காணப்படுகின்றது.

எனவே இன்றைய கிழக்கு ஐரோப்பாவினது மாற்றமும் நோக்கும் எல்லா வகையிலும் ஆழ்ந்த பரிசீலனைக்கு உரியவை. இதன் நன்மை, தீமைகள் சரிவர ஆராயப்பட வேண்டும். நாம் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன இங்கு ஏற்படும் மாற்றங்கள் எமது தலைவிதியை பாதிக்கும் வல்லமை வாய்ந்தவை. ஆதலினால் இது அதிக கவனத்தைப் பெறவேண்டும். □

# ராஜீவ் ஆட்சியைச் சாடும் கே. ஸி. பந்த்

பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் தான் அங்கம் வகித்த அரசாங்கத்தை தாக்கிப் பேசியுள்ளமை பெரும் அதிர்ச்சி தரும் விடயமாகும்.

தொகுதி ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினையில் பாதுகாப்பு அமைச்சர் கே. ஸி. பந்த்துக்கு ஏற்பட்ட முரண்பாட்டால் அவர் அரசாங்கத்தையே வெளிப்படையாகத் தாக்கிப் பேசியுள்ளார் — என பி.பி.ஸி.திங்களன்று கூறியது.

சொந்தமாகத் தீர்மானம் எடுக்கும் திறமையின்றி சுற்றியுள்ள சில தனிப்பட்ட நண்பர்களின் கருத்துப்படி தீர்மானம் எடுப்பவர்களின் திறமையீனத்தால் பெரும் சீரழிவு நாட்டின் அரசியலுக்கு ஏற்பட்டுள்ளது என்ற பொருளில் கே.ஸி பந்த் கருத்து வெளியிட்டுள்ளார். வெளிப்படையாக இந்த நபர் யார் என்று இவர் பெயர் குறிப்பிடாது விட்டாலும் ''திறமையற்றவர்'' என்று இவர் குறிப்பிடுவது பிரதமர் காந்தியையே குறிக்கும் என விமர்சகர்கள் கூறுகின்றனர். எவ்வாறாயினும்ராஜீவ் தலைமையிலான ஆளும் அரசாங்கத்தை கண்டித்துள்ளார் என்பதில் ஐயமில்லை.

## ஈழத்தமிழ்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி பார்த்தால் இந்த நூலின் பழமொழிகளில்பலவும் தமிழ் நிலமெங்கும் வழக்கில் உள்ளவை என்று உணரக் கூடியதாக உள்ளது. பிரதேசப் பழமொழிகள் அந்தந்தப் பிரதேச வாசனை கமழ்வதாயிருக்கும் என்பதோடு, அவற்றிற்கே சொந்தமான பிரச்சினைகள் அநுபவங்களின் உள்ளடக்கமாகவும் இருக்கும் என்பதும், இதற்குரிய சிறப்பு அம்சமாயிருக்கும். இந்த முயற்சி எமது ஈழத்தமிழ் இனத்தின் சொந்த அடையாளப்படுத்தலைக் காட்டிநிற்கும் என்பதால், ஆசிரியர் மேற்கொண்டு இதிலேதான் விசேட அக்கறை காட்டுவதே பெரிதும் விரும்பத்தக்கது. தமிழ் நாட்டில் தலைசிறந்த கலைஞரான கி. ராஜநாராயணன் தாம் சார்ந்த கரிசல் வட்டார வழக்காறுபற்றி,மிகவும்ஆத்மார்த்தமான உழைப்போடு வெளிக்கொணர்ந்த முயற்சிகளை இங்கு நாம் நினைவுபடுத்திப் பார்த்தல், எமக்கு உதவும். தமிழ்நாட்டில் பழமொழிகளை சொலவம் அல்லது சொலவடைகள் என்பர்.இந்த வகையில் கரிசல் வட்டார சொலவடைகள்பற்றி கி. ரா. ஜூனியர் விகடனில் எழுதிய தொடரும், 'கரிசல் காட்டுக். கடுதாசி' என்ற தலைப்பில் அவர் எழுதிவந்த 'வட்டார' நிகழ்வுகளின் நினைவுத் தொடரும் குறிப்பிடத்தக்கன. அதைவிட அவர் தயாரித்தளித்த 'வட்டார வழக்குச் சொல்லகராதி' என்ற நூலும் அவரது மிகப் பெரும் பங்களிப்பாகும். எனவே பிரதேச வழக்காறுகளின் பல்வேறு முகங்களையும் பிரதிபலிக்கும் முயற்சிகளிலும் ஆசிரியர் மட்டுமல்லாது பலரும் ஈடுபட வேண்டும். இது போன்ற விடயங்களில் எமது பல்கலைக் கழகத்தினர் ஏன் முனைந்து ஈடுபடக்கூடாது? கி.ரா.என்ற கலைஞனின் ஆத்மார்த்த உழைப்பாளிகள் எம்மத்தியிலும் 'சச்சி மாஸ்டர்' போல இலைமறை கனியாய் இருப்பவர்களை ஊக்குவித்து வெளிக் கொணரக்கூடாது? இது ஒரு வேண்டுகோள்.,

பழமொழிகள் பல பிரதேச ரீதியான வாசனைகள்கொண்டவையாய் இருந்தாலும் பல பழமொழி வழக்குகள் பிரதேச, மொழி, இனவேலிகள் தாண்டி எங்கும் ஒத்த கருத்தோட்டம், உணர்வோட்டம் உள்ளவையாய் இருப்பதையும் நாம் காண்கிறோம் அல்லவா? இதுபற்றியும் யாரும் ஆய்வு செய்தால் பயனுள்ளதாயிருக்கும். மேற்கத்தைய மனோவியல் நிபுணரான ஜுங் என்பவர் பல்வேறு இனக்குழுக்களின் சடங்குகள், கலாசாரங்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். அவ்வாறு அவர் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் எல்லா இனக்குழு, சமய, கலாசார சடங்குகள், நிகழ்வுகள் இடையே பொது ஓட்டத்தைக் கண்டார். ''அவற்றின் நனவிலி மனதின் அடி உணர்வோட்டம் எங்கும் ஒன்றாயிருக்க வேண்டும்'' என்ற முடிவுக்கு அந்த ஆய்வுகள் இட்டுச் சென்றன. எல்லா ஆதி கலாசார வெளிக் காட்டல்களிலும் ஒரு ஆதிவேரோட்டம்; அந்த ஒன்றின் பல்வேறு வெளிக்காட்டல்கள் எல்லா இனங்களின் மனஅசைவு, கனவு, நிகழ்வுகள் எல்லாவற்றிலுமா? இது சிந்தனைக்குரியது. எல்லா இனமக்களின் வழக்காற்றிலுள்ள பழமொழிகளிலும் இதே வெளிக்காட்டல்தானா? இது சீரான ஆய்வுக்குரியது. நம் தமிழ் மண்ணில் இத்தகைய ஆய்வெல்லாம் நிகழ்வதற்கான சாத்தியமுண்டா? ஆவலாயிருக்கிறது.

இத் தொகுப்பு நூலின் குறைகள் சிலவற்றையும் இறுதியாய்ச் சொல்லவே வேண்டும். நூலின் வெளிஅட்டை அமைப்பு மிகத்தரமற்றதாயிருப்பது வருந்தத்தக்கது. வெளியீட்டமைப்பு நவீனம் பெற்றுவரும் காலத்தில் அட்டை அமைப்பின் நலிந்த, அழகற்றகோலம் மனதை நெருடவே செய்கிறது. கையிலே தூக்கி வைத்திருக்க நூலின் 'கனதி' மட்டுமல்ல வெளி அழகும் வேண்டும் தானே. அத்தோடு நூலின் உள்ளே ஆசிரியர் பல்வேறு ''உரைக்கோவை'களை சேர்த்திருக்கிறார். 'அணிந்துரை' 'முகவுரை' 'கருத்துரை' 'என்னுரை' இப்படியெல்லாம் பலரின் முகங்களை திருப்திப்படுத்தவோ அல்லது பலரின் அங்கீகாரம் கருதியோ வேண்டிப் பிரசுரித்திருப்பது விரும்பத்தக்கது அல்ல. குறித்த ஒருவரிடம் நல்ல ஆய்வுரையாக பெற்றுப் பிரசுரித்திருந்தால் அது குறித்த துறைக்கு மேலும் கனம் சேர்த்திருக்கும்.

இனிமேல் நூல் வெளியீடுகளில் இவற்றை மனங்கொண்டு ஆசிரியர் முயல்வது நல்லது. சச்சி மாஸ்டரின் முயற்சி பயனுள்ளதாக மேலும் தொடர்வதும், புதிய பிரதேச வழக்காற்றிலும் ஈடுபடுவதும் தமிழுக்கு அணி சேர்க்கும் என்பது நம்பிக்கை. □

## முகத்திரை...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை உண்டாக்கி விடுவது பற்றி அறியாத அசட்டுத் தனம். இதில் அடக்கம்தானே தம்பையா வாத்தியாரும்.

முகத்திரை இன்னொன்று. கருத்துப் பரிமாறிக் கொள்ள முகத்தை முகம் புரிந்து கொள்ள உருவான மொழியையே வேறுதிசையில் திருப்பிவிட்டுக் கொண்டு சுயமுகங்களுக்கு திரை போட்டுக் கொள்ளும் மனிதர்கள். மரியாதை பண்பு, சுயகௌரவம் என்பவற்றின் பிரயோகத்தை எல்லாம் பகுத்தாயத் தெரியாது திணறுபவர்கள். மனித முக்கியத்துவங்களுள் அவையும் அடக்கம் தான் எனினும் பரஸ்பரம் புரிந்து கொள்ளால் களுக்கிடையே அவை அநாவசியமாய் விழுந்து முகங்களை மூடி விடுகிற போது, திரையை விலக்க திராணியற்று அஞ்சிச் சாகும் அற்பத்தனம்.

அந்த அற்பத்தனம் தான் இங்கே இன்னும் திரையை விலக்காமல் இருக்கிறது. நீண்ட நேரமாய்ப் பேசியும் இருவருக்கும் இருவர் முகங்களும் துலங்கவில்லை.

நேரம் அதிகமாய்க் கடந்து போய்விட்டதை இந்திரன் உணர்கிறான். தம்பையா வாத்தியாரும் கூட உணர்கிறார். அதனைச் சொல்லிக் கொண்டு; பிரிந்து விடைபெறுகிற நேரத்தில் தம்பையா வாத்தியார் கேட்கிறார், ''அப்ப தம்பி உம்மை வீட்டில கொண்டு போய் இறக்கி விடட்டே?'' வீட்டில் கொண்டு போய் விடுகிற சாக்கில் போனால், அவன் உள்ளே அழைத்து உட்கார வைத்துப் பேசுவான். அப்போதாவது தனக்கு உதவி செய்யும் கோரிக்கை வரலாம் என்பது, இறுதி நேரத்தில் அவருக்குள் உந்திய ஏக்கம். அதுவே அப்படி ஒரு கேள்வியாய் வந்து விழுந்தது வெளியே.

''வேண்டாம் ஸேர். பக்கம் தானே நடந்தே போறன்.'' அவர் ஒரு உபசாரத்திற்காய் கேட்டதாய் இவனின் எண்ணப் பதிவு. அவருக்கு மரியாதை தந்து பதிலளிக்கிறானும் மறுப்பு.

திரை திரையாகவே இருந்து கொண்டிருக்க அவரவர் பாதையில் போக ஆரம்பிக்கின்றனர்.

## அரங்கக்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடும். தத்தம் நாடக எழுத்துருவை அணைத்தபடியோ அல்லது ஒளித்து வைத்தபின் போதான் அவர்களால் நித்திரை கொள்ளமுடியும். போட்டியில் இடம் பெறும் நாடகங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, பாடசாலையிலோ அல்லது வகுப்பறையிலோ உருவாகும் பிரிவினைக் குழுக்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

நாடக ஒத்திகைகளின் போது பிறரை அதனருகே அணுகவிடாத இயக்குநர்களும் இருக்கிறார்கள். தமது நாடகத்தில் பயன் படுத்தப்படும் உத்திகளை மற்றவர்கள் திருடி விடக் கூடாதென்பதற்கே இந்த ஏற்பாடு. தக்கவர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெறுமை ஒருபுறமும்; எதுவுமே புரிந்து கொள்ளாமல் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லுபவர்களது தொல்லை மறுபுறமாகவும், நாடக உருவாக்கத்தைப் பாதிக்கும் காரணிகளாக அமைகின்றன.

### 3

பல நிகழ்ச்சிகளில் ஒன்றாக நாடகமும் இடம் பெறும் போது, விழாவை நிறைவு செய்து வைக்கும் பொறுப்பு நாடகத்துக்கு வழங்கப்படுவது வழமை. முன் இடம்பெறும் நிகழ்ச்சிகளின் ஒழுங்கின்மை காரணமாக, முக்கியமாக பேச்சாளர்களின் நிறைந்த ''அறிவாற்றலினால்'' நிகழ்ச்சிகள் உரிய நேரத்தில் நடைபெறுது இழுபட்டுச் செல்லும்.

பல நாட்களாக பலரது கூட்டுழைப்பில் உருவான நாடகம் அகாலத்தில் அரங்கேறும். பார்வையாளர் பொறுமையிழந்த நிலையில் இருப்பர். இது நாடகத்தை எவ்வளவிற்குப் 'பாதிக்கும்? இந்தச் சின்ன விடயத்தைக் கூடவா புரிந்து கொள்ள முடியவில்லை?

மிகக் குறுகிய கால அவகாசத்தில் நாடகத்தைத் தயார் செய்வதும், அரைவேக்காட்டுப் படையலையே 'குறுகிய காலத்தயாரிப்பு' என்ற சான்றிதழுடன் மேடையேற்றுவதும்; குறுகிய காலத்தில் நிகழ்த்திய சாதனை பற்றிப் பேசிக் கொண்டிருப்பதும், காத்திரமான நாடக வளர்ச்சிக்கு எந்த வகையிலும் பலம் சேர்ப்பதாக இருக்கமுடியாது.

### 4

இனி, நாடகத்தூடு சொல்ல வரும் விடயத்தை நாம் சொல்லத் தகுதியுடையவரா? அல்லது நாடகம் உருவாகும் காலத்தில் மெல்ல மெல்ல எம்மைத் திருத்திக் கொண்டு வருகிறோமா என்பதைக், கவனத்தில் கொள்ளவேண்டும்.

நாம் நாடகத்தூடு சொல்லவரும் விடயத்தை யார் மூலம் சொல்கிறோமோ அவர்களே எமது கைக்குக் கிட்டியவர்கள். எனவே சொல்ல வரும் விடயத்தில் அவர்களையும் நம்பிக்கையுள்ளவர்களாக ஆக்குவது முக்கிய பணியாகிறது.

எம்முடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள நடிகரை வெற்றி கொள்ள முடியாத எம்மால், எம்முடன் நேரடித் தொடர்பற்ற பார்வையாளரை எப்படி வெற்றிகொள்ள முடியும்?

சொல்லும் விடயத்தில் நாம் கொண்டுள்ள விசுவாசம் நடிகர்களை விசுவாசம் உடையவர்களாக்கும்; நடிகர்கள் தாம் சொல்லும் விடயத்தில் கொண்டுள்ள விசுவாசம், பார்வையாளரை நாம் சொல்லும் விடயத்தை விசுவாசிக்கச் செய்யும். இங்கேதான் எமது முயற்சி வெற்றி பெறும்.

## சட்ட விரோத சாராயக் கடைகள் விவகாரம் மது ஒழிப்புக் குழு தீவிரம்

''சட்ட விரோத மதுச்சாலைகளை மூடும் பணியில் யாழ் நகரில் இயங்கும் மதுஒழிப்புக் குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இக்குழு தமது பணியைச் சிறப்பாகச் செய்ய சேவை நல மனப்பான்மை கொண்ட மக்களது, சிறப்பாகச் சகல சனசமூக நிலைய உறுப்பினர்களுடைய ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது'' — இவ்வாறு நல்லூர் (உ.அ.அ.பிரிவு) சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது :

'மது ஒழிப்புக்குழு உறுப்பினர்கள் யாழ் நகரசபையின் அதிகார எல்லைக்குள் இயங்கும் சட்டவிரோத மதுச்சாலைகளைக் கண்டுபிடித்து நடவடிக்கையெடுக்க வரும்போது, பூரணவொத்துழைப்பை நல்கி ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு எமது சனசமூக நிலையத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்''

## உ. த. ஆ. மாநாடு இலங்கைக் குழு செயற்குழு உறுப்பினர்

தலைவர்: பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, இணைச்செயலாளர்கள்: பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் பு பூலோகசிங்கம். துணைத்தலைவர்கள். பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் ம. மு. உவைஸ், பேராசிரியர் எஸ். சசிந்திரராசா, மகாவித்துவான் F. X. C. நடராசா, திரு. கே. சச்சிதானந்தன். பொருளாளர்கள்: திரு.வி.எஸ். துரைராசா, டாக்டர். எஸ். சபாரத்தினம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இலங்கைக்கிளை செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## நூல் சஞ்சிகை, ஓவிய, சிற்பக் கண்காட்சி

யாழ் உள்ளூராட்சித் திணைக்களம், யாழ் றோட்டரிக்கழகம், யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து நடாத்திய ஈழத்து நூல், சஞ்சிகை, சிற்ப, ஓவியக் கண்காட்சி, கடந்த 28, 29 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

மேற்படி கண்காட்சியின் போது, எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி இடம் பெற்றதோடு, 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி எதிர்நோக்கும் பிரச்சினைகள்' 'ஈழத்தின் கலை வளர்ச்சி' என்பன பற்றி கலந்துரையாடல்கள் விறுவிறுப்பாக இடம்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சவப்பெட்டி வியாபாரம்

ஆஸ்பத்திரி றோட், தாராக்குளம் வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் வைத்துச் சிலர் பிரேத வண்டிகளை வாடகைக்கு விட்டும், சவப்பெட்டி வியாபாரமும் செய்கிறார்கள். இதனால் குடியிருப்பாளர் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகிறார்களாம். இந்த சட்ட விரோத நடவடிக்கையை தடைசெய்யுமாறு கோரி, அடைக்கலநாயகி சனசமூக நிலையத் தலைவர் வீடமைப்பு அதிகார சபைத் தலைவருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

## பிரசவ லீவு

அரச பணியிலுள்ள பெண்களுக்கு மூன்று மாதங்களுக்கு மகப்பேற்று விடுமுறை வழங்கப்படும் என்று ஏலவே செய்திகள் வெளிவந்துள்ளன. செய்தியை நம்பி, யாழ்ப்பாணத்தில் மகப்பேற்று லீவில் மூன்று மாதங்கள் நின்ற சில ஆசிரியைகள் கஷ்டத்தில் மாட்டியுள்ளார்களாம். இது தொடர்பாக அறிவுறுத்தல் எதுவும் இல்லாததால், மூன்று மாதங்கள் மகப்பேற்று லீவில் நின்ற ஆசிரியைகளின் லீவு சம்பளமற்ற லீவாகக் கணிக்கப்படவுள்ளதாம்.

## பாடசாலை 3-ஆம் தவணை நீடிக்கப்படுமா?

இலங்கையில் பாடசாலை நாட்கள் 200. ஆனால் தென் பகுதியில் 1989 ஆம் ஆண்டில் 3 ஆம் தவணைவரை 75 நாட்கள்தான் பாடசாலைகள் இயங்கியுள்ளன என்று மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். செயலாளரின் அறிவித்தலின் பிரகாரம் நடப்பு வருடக் கல்வியாண்டு 1990 மே 2 ஆம் திகதி வரை நீடிக்கப்படும். அதே சமயம் 1990 மே 2 ஆம் திகதிக்குப் பின்னர் ஆண்டு ஒன்றுக்கான பாடசாலை அனுமதியும் இடம் பெறும்.

க. பொ. த (உயர்தரம்) பரீட்சை 1989 டிசம்பர் 4 ஆம் திகதி ஆரம்பமாகி இருபது நாட்கள்நடைபெறவுள்ளதாம். குறுகிய காலக் கிறிஸ்மஸ் விடுமுறை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்றும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பதவி வெற்றிடம்

இலங்கை சீமேந்துக் கூட்டுத்தாபனம் கா.பொ த. (சா/த) பரீட்சையில் சித்தி எய்திய இளைஞர்களிடமிருந்து ஏமக்காவலர் (SECURITY GUARDS) பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. தகுதியுள்ளவர்கள் நவம்பர் 10-ஆம் திகதிக்கு முன்னதாக மேற்படி கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக் கூடியதாக தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

மலையக இலக்கிய சிற்பி
என். எஸ். எம். ராமையாவின்
முகப்போவியத்துடன்
கொழுந்து ஆறுவது இதழ் வந்துவிட்டது.
'கொழுந்து'
விலை 5 ரூபா
விபரங்கட்கு:
மலையக வெளியீட்டகம்
57, மகிந்த பிளேஸ்
கொழும்பு - 6
தேசபக்தன் லோ. நடேசய்யர்
வரலாற்று ஆய்வு நூல்
எமது வெளியீடுகள் கிடைக்கும் இடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

நாங்கள் புதியவர்கள் அல்ல !
நாம் அதே பழையவர்கள்
ஆனால் புதிய கோணத்தில் புதுப்பொலிவுடன்
மேலும் வசதிகள் உள்ள நவீன கட்டிடத்தில்
உங்களுக்கு மேலும் சிறந்த முறையில்
சேவை செய்ய
அருள் எலெற்றிக்கல்ஸ்
(மின்சார உபகரண விற்பன்னர்கள்)
3ஆம் திகதி நவம்பர் மாதம் 1989 முதல்
யாழ்நகர், 110, ஸ்ரான்லி வீதியில்
பெருமகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கின்றேன்.
விளம்பர வடிவமைப்பு:-
செனித் ஜோ. எகட்டன் யாழ்.

திசை
THISAI

# இசைமுகம்

"சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே"

## அமைச்சர் ரஞ்சனின் 'டம்பிங்'!

கடந்த வருடம் நொவம்பர் மாதம் மாலைதீவுத் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களென கைது செய்யப்பட்டுத் தண்டனைக்குள்ளான 68 இலங்கைத் தமிழ் இளைஞர்களையும் இலங்கைக்கே மாலைதீவு அரசாங்கம் திருப்பி அனுப்பி விடலாம் என நம்பப்படுகிறது.

இது பற்றி இலங்கைப் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜயரத்னவிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்ட போது, அவர் அதற்களித்த பதில் வியப்பையும் அதிர்ச்சியையும் தருவதாய் அமைந்துள்ளது. "அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டால் அதற்கு நாங்கள் என்ன செய்வது ? அவர்கள் களவாகச் சென்று சதி ஒன்றில் ஈடுபட முனைந்தனர். எங்களைப் பொறுத்த வரை அவர்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டாலும் கவலைப்பட்ப் போவதில்லை" — இதுவே ரஞ்சன் விஜயரத்ன கொடுத்துள்ள பதிலாகும்.

ஒரு நாட்டின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் அளிக்கக் கூடிய பதிலா இது ?
தன் நாட்டுப் பிள்ளைகள், வேற்று நாட்டில் சென்று புரிந்த குற்றத்திற்கு, அந்த வேற்று நாட்டவரே மன்னிப்பு அளித்து அவர்களைத் திருப்பி அனுப்பத் தயாராகும் போது பிள்ளைகளைக் கையேற்க வேண்டிய தாய் நாட்டவர் கூறும் பதிலா இது ?

இத்தனைக்கும் இலங்கையின் அரசியல் யாப்பின் சட்டமே இலங்கைப் பிரஜை எவரும் தன் தாய்நாட்டுக்குத் திரும்புவதற்குச் சுதந்திரம் உடையவர் என்றும், வேறு நாட்டில் இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை அவர்தம் தாய் நாட்டில் செல்லுபடியாகாது என்றும் கூறுகிறது.

அரசியல் யாப்பை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களில் ஒருவரான பொறுப்பு வாய்ந்த அமைச்சரோ, இவற்றைக் கனம் பண்ணாது தன்நாட்டுப் பிள்ளைகளையே கடலில் மூழ்கடிக்கச் சொல்லியுள்ளார். ஏன் இந்தக் குரோதமும் பொறுப்பின்மையும் ?

ஒரு தந்தையானவன் தனது பிள்ளை அயல்வீட்டில் சென்று தவறு செய்த போதும், அப்பிள்ளை அவ்வயலவர்களால் குட்டுப்படுவதை விரும்பமாட்டான். ஆனால் தவறு செய்த தன் பிள்ளையைத் தண்டிக்க வேண்டிய அயலவர்களே மன்னித்து வீடுக்கு அனுப்பும் போது, இவன் உள்ளூர மகிழும் அதே நேரத்தில் தான் அப்பிள்ளையைத் தண்டித்தும் கண்டித்தும் வேறு வழிகளிலும் திருத்தி விடவே முயலுவான்- மாறாக கடலில் வீசிவிட வேண்டும் என்று நிற்கமாட்டான்.

தனிமனிதன், வீடு, நாடு என்பவையெல்லாம் ஒரே தர்மத்தை வெவ்வேறு அளவுகளில் வெளிக்காட்டுபவையே !

இவை அமைச்சருக்குப் புரியாமல் போனதன் காரணம் என்ன ?

தவறு செய்த பிள்ளைகள் தமிழ்ப்பிள்ளைகள் என்பதாலா?

இந்தத் தமிழ் — சிங்களம் என்ற வேற்றுமையின் ஊடுருவல்தான் இன்றைய இலங்கையின் அமைதியின்மைக்கே காரணம்.

தாம் இயற்றும் சட்டங்களையே ஆட்சியிலுள்ளவர்களால் கௌரவிக்க முடியவில்லை என்றால் நாட்டில் அமைதி எங்கே ஏற்படப்போகிறது ? □

# சுதந்திரக்கட்சி வெளியேற்றம்

## சர்வகட்சி மாநாடும் நிதி வழங்கும் பரிஸ் மாநாடும்

சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது. இதற்கு முன்பு இவ்வாறு இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சிதானும் கலந்து கொள்வதில்லை என அறிவித்திருந்தமை தெரிந்ததே.

ஒரு நாட்டில் வன்செயல்கள் வளர்ந்து செல்லும் சூழலில் அந்நாட்டிற்கு நிதி வழங்கக்கூடாதென்பது நிதி வழங்கும் நாடுகளின் கொள்கைகளில் ஒன்று. நிதி வழங்கும் நாடுகள் பிரேமா அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு நிதி வழங்க உண்மையில் விரும்பிய போதிலும், இலங்கையில் வன்செயல்களைத் தணிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதான ஒரு சாட்டு அந்நாடுகளுக்குத் தேவைப்பட்டது. எனவே கடந்தமாதம் பரிஸில் நிதி வழங்கும் நாடுகளின் மாநாடு கூட இருந்த காலகட்டத்தை அண்டி, சர்வகட்சி மாநாட்டை கூட்டும் முயற்சியில் பிரேமா ஈடுபட்டார்.

சர்வகட்சி மாநாட்டை கூட்டுவதற்காக ஜனாதிபதி முறைமையை மாற்றத் தயார் போன்ற நிபந்தனைகளுடன் கூடிய வாக்குறுதிகளை பிரேமா அறிவித்தார். எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பது போன்ற தோரணைகள் பிரேமாவின் வாக்குறுதிகளில் இருந்தன. எதிர்க்கட்சிகளும் ஆரவாரத்துடன் சர்வகட்சிமாநாட்டில் பங்கெடுத்தன. அதேவேளை பரிஸில் நடைபெற்ற நிதி வழங்கும் நாடுகளின் மாநாடு இலங்கை அரசிற்கு சாதகமான முடிவுடன் முடிவடைந்தது.

பரிஸ் மாநாடு முடிவடைந்த பின்புதான் உண்மையைப் புரியக்கூடிய நடைமுறைரீதியான சந்தர்ப்பம் பல எதிர்க்கட்சிகளுக்கு ஏற்பட்டன. அதனால் தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாக சில எதிர்க்கட்சிகள் தமது அடிவயிற்றில் குத்திக் கொள்கின்றன.

சர்வகட்சி மாநாட்டில் இனிக் கலந்து கொள்வதில்லை என்ற சுதந்திரக் கட்சியினது முடிவை இப்பின்னணியில் வைத்துப் புரிந்து கொள்ளல் பொருத்தமுடையதாகும்.

## அம்பாறையில் வன்செயல் ஒருவர் பலி எழுவர் காயம்

தமிழ், சிங்கள, முஸ்லிம் எனப் பல சமூகங்கள் வாழும் அம்பாறை மாவட்டம் வன்செயல்கள் வெடிக்கக் கூடிய பரிசோதனைக் களமாக அமையக்கூடும் எனக் கருதியே அங்கிருந்து இந்திய அமைதிப் படை முதலில் வெளியேறி இருக்கலாம் என தோன்றுகிறது.

அமைதிப்படை வெளியேறிய பின்பு முதல் முறையாக அம்பாறையில் ஒரு வன்செயல் நிகழ்ந்துள்ளது. ஒரு கடை மீது "கிரனேட்" வீசப்பட்டு அதில் ஒருவர் பலியானதுடன் ஏழு பேர் காயமடைந்ததாகவும் பி.பி.சி. அறிவித்துள்ளது.

இதன் பின்னணி யார் என்பது இன்னும் தெரியவரவில்லை. அங்கு வன்செயல்கள் எதுவும் வெடிக்காது பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இலங்கை அரசு கவனமாய் இருப்பதாக அறிவித்துள்ளது.

## வேட்பு மனுவும் குண்டுப் புரளியும்

வேட்பு மனுவை தாக்கல் செய்ய வி. பி சிங் பிரயாணம் செய்த விமானத்தில் குண்டு உள்ளதாக ஒரு புரளி அவிழ்த்து விடப்பட்டது. இப்புரளியையும் மீறி வி. பி. சிங் செயற்பட்டு தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்

## பாகிஸ்தானுக்கே நேரு கிண்ணம்

ஜவஹர்லால் நேரு கிண்ணத்துக்கான ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கட் போட்டிகள், கல்கத்தாவில் புதன் கிழமை நடந்த இறுதிப் போட்டியுடன் முடிவடைந்தன.

மேற்கிந்தியத்தீவுக் கோஷ்டியுடன் விளையாடிய பாகிஸ்தான் கோஷ்டி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுக் கோஷ்டி 50 ஓவர்களில் 273 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் ஆடிய பாகிஸ்தான் கோஷ்டி 49.5 ஓவர்களில் 6 விக்கட்டுகளை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்று, 4 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

## நிவாரணம்

யாழ் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நிவாரண திட்டத்திற்கு அமைய மீளக் குடியமர்வு திட்டத்தின் கீழ் ரூபா 2000 - உதவி பெறுத மேலும் 36,000 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் உதவியை வழங்குவதற்கு உயர் மட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறதாம்.

## ஆர்ப்பாட்டம்

சுதந்திரமான தேர்தல் நடத்துமாறு கோரி இரண்டரை லட்சம் பேர் கடந்த செவ்வாயன்று கிழக்கு ஜேர்மனியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சோவியத் யூனியனிலும் ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டு வரும் அரசியற் சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் தொடர்ந்து கிழக்கு ஜேர்மனியிலும் அதற்கான கிளர்ச்சிகள் ஏற்பட்டு வருகின்றன.

## போக்குவரத்துச் சீர்குலைவு

யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சிக்கான பொதுப் போக்குவரத்து வசதிகள் கடந்த ஐந்தாறு நாட்களாகச் சீர்குலைந்துள்ளன. ஒரு சில தனியார் பஸ்களே 751 பஸ் பாதையில் ஓடுகின்றன. 750 பஸ் பாதையில் எத்தகைய போக்குவரத்து வசதிகளுமில்லை. இதனால் பொது மக்கள் மிகுந்த அவதிக்குள்ளாகியிருக்கின்றனர்.

## இஸ்ரேலியர் வெளியேற வேண்டும்

சபாநாயகர் எம். எச். முகம்மது, இலங்கையைவிட்டு இந்தியப் படைகள் வெளியேறிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், இலங்கையில் தங்கியுள்ள இஸ்ரேலிய நலக் குழுவும் வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இஸ்ரேலியக் குழு இங்கு தங்கியிருப்பதால், இலங்கைக்குப் பெருமளவு உதவி செய்யும் அரபு உலகோடு வீணே பகைமையை இலங்கை சம்பாதிக்க வேண்டி நேரிடலாம் எனவும், அவர் எச்சரித்துள்ளார்.

## நேருவுக்கு அமெரிக்கா அஞ்சலி

புதனன்று கூடிய அமெரிக்க கொங்கிரஸ் ஜவஹர்லால் நேருவின் நூற்றாண்டு தினத்தை ஒட்டி அவருக்குப் பெரும் அஞ்சலி செலுத்தியது.

நேருவுக்கு கொங்கிரஸ் செலுத்திய இவ் வஞ்சலி மிகுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ராஜீவ் தலைமையின் கீழ் வளர்ந்து செல்லும் இந்திய - அமெரிக்க உறவை மேலும் வலுப்படுத்துவதற்கேற்ற ஒரு நடவடிக்கையே இதுவென, அவதானிகள் கருதுகின்றனர். இந்த அமெரிக்க கொங்கிரஸில் உரையாற்றும் வாய்ப்பெதனையும் பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கு, அமெரிக்கா ஒருபோதும் கொடுத்ததில்லை. ஆனால் இந்திராவின் மகன் ராஜீவ் பிரதமரானதும், அமெரிக்காவின் இரு சபைகளும் இணைந்த கொங்கிரஸ் அமர்வில் உரையாற்றும் சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

LONDON EXAMS

C. I. M. A. — STAGE — 1
I. D. P. M. — PART — 1
A. A. T. — PRELIM
I. A. B. — FOUNDATION

Lectures by Qualfied
Experiance and Dedicates
Panel of Lecturers

SCHOOL OF
BUSINESS ADMINISTRATION
( PIONEERS IN ACCOUNTANCY EDUCATION )
16, 3rd Cross Street, JAFFNA.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 3-11-1989இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.